ஆகஸ்டு 2004
www.padippakam.com
ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்




## இந்திய இராணுவத்தின் காமவெறி! கொலை வெறி!




## குமுறும் மணிப்பூர்

படிப்பகம்

www.padippakam.com

# இந்திய இராணுவத்தின் காமவெறி! கொலை வெறி!

# குமுறும் மணிப்பூர்

மணிப்பூர் மாநிலத்தில் நடந்து வரும் அறிவிக்கப்படாத இராணுவ ஆட்சி எந்தளவிற்குச் சகிக்க முடியாததாக ஆகிவிட்டது என்பதற்கு இந்த இதழின் அட்டைப்படமே சாட்சி. கடந்த ஜூலை 10-ஆம் தேதி அம்மாநிலத்தைச் சேர்ந்த முப்பது வயதான தங்லாம் மனோரமா என்ற பெண்ணைத் தீவிரவாதி என முத்திரை குத்தி, அவரது வீட்டில் இருந்து தனது கொட்டடிக்கு இழுத்துப் போனது அசாம் துப்பாக்கிப் படை. மறுநாள் மனோரமாவின் பிணம்தான், ஒரு மலையடிவாரத்தில் அனாதையாகக் கிடந்தது.




ஆயுதப் படையினர் சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரி மணிப்பூர் பெண்கள் நடத்திய தீப்பந்த ஊர்வலம்.

மனோரமாவைச் சித்திரவதை செய்து, பாலியல் பலாத்காரப்படுத்தி, துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துவிட்டுத் தூக்கியெறிந்துவிட்டதாக இந்திய இராணுவத்தின் மீது மணிப்பூர் மக்கள் அனைவரும் ஒரே குரலில் குற்றஞ் சுமத்தியுள்ளனர். தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரில் நடத்தப்பட்டுள்ள இந்தப் பச்சை படுகொலையைக் கண்டித்து, 40-க்கும் மேற்பட்ட பெண்கள், தங்களின் ஆடைகளைக் களைந்துவிட்டு, ''இந்திய இராணுவமே, எங்களையும் பாலியல் பலாத்காரப்படுத்து'' என்ற ஆர்ப்பாட்ட முழக்கம் எழுதப்பட்ட பதாகையை உடம்பில் போர்த்திக் கொண்டு, மணிப்பூர் மாநிலத் தலைநகர் இம்பாலில் உள்ள அசாம் துப்பாக்கிப் படைப் பிரிவின் தலைமையகம் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்தான் அட்டையில் உள்ள படம். பெண்கள், நிர்வாணமாக நடுத்தெருவுக்கு வந்து போராடுகிறார்கள் என்றால், இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள் எவ்வளவு தூரம் எல்லை மீறிப் போயிருக்க வேண்டும்!

தேசிய மனித உரிமை ஆணையம், நீதிமன்றம் - இவையெல்லாம் ''தவறு'' செய்யும் இராணுவத்தினரைத் தண்டிக்காமல் விட்டுவிடுமா என நீங்கள் கேட்கலாம். ''ஆயுதப் படையினர் சிறப்பு அதிகாரச் சட்டம்'', இராணுவத்தினருக்கு சந்தேகப்படும் நபர்களை எவ்வித ஆதாரமும் தராமல் கைது செய்ய மட்டுமின்றி, அவர்களைச் சுட்டுக் கொல்லவும் உரிமை அளிக்கிறது. ''தீவிரவாதம் பாதித்த பகுதி'' என அறிவித்து, இச்சட்டத்தை ஒரு மாநிலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட்டால், பிறகு இராணுவம் வைத்ததுதான் சட்டம். இச்சட்டத்தின் முன், அம்மாநிலத்தின் முதலமைச்சர், சட்டமன்றம், நீதிமன்றம் எல்லாம் செல்லாக் காசு. இச்சட்டத்தின்படி, மைய அரசு சிறப்பு அனுமதி அளித்தால் மட்டுமே, ஒரு சாதாரண சிப்பாயைக் கூட விசாரிக்க முடியும். மோதல் படுகொலையை நடத்தும் போலீசின் மீதே விசாரணை நடத்த மறுக்கும் அரசு, இராணுவத்தையா தண்டித்துவிடும்?

இந்தச் சட்டம் மணிப்பூர் மாநிலத்தில் கடந்த 24 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. வேறு மாதிரியாகச் சொன்னால், அம்மாநிலத்தில் கடந்த 24 ஆண்டுகளாக அறிவிக்கப்படாத இராணுவ ஆட்சிதான் நடந்து வருகிறது. தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராட்டங்கள் நடந்து வரும் வடகிழக்கு இந்தியாவின் பிற மாநிலங்களிலும், ஜம்மு - காசுமீரிலும் இச்சட்டத்தின் பாதுகாப்போடுதான் இந்திய இராணுவம் பேயாட்டம் போட்டு வருகிறது.



மனோரமாவின் படுகொலையை கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தின் மீது போலீசு நடத்திய கண்ணீர் புகை குண்டு வீச்சு தாக்குதலில் காயமடைந்த பெண்ணைத் தூக்கிச் செல்லும் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

மனோரமாவின் படுகொலையைக் கண்டித்தும், ஆயுதப் படையினர் சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரியும் தற்பொழுது மணிப்பூர் மாநிலமெங்கும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. சுட்டுக் கொல்லப்பட்ட மனோரமா குடும்பத்தினர், இப்பாசிச சட்டத்தை நீக்காமல், மனோரமாவின் உடலை வாங்கிக் கொள்ள முடியாது எனக் கூறி விட்டனர். மணிப்பூர் இளைஞர் முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள், இச்சட்டத்தை நீக்கக் கோரி, மணிப்பூர் முதல்வர் வீட்டின் முன்பாக, தங்களின் உடலின் மீது மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு, தீ வைத்துக் கொண்டனர்.

''பொடா''வை நீக்கக் கோருவதில் எந்த அளவிற்கு நியாயமுண்டோ, அதைப் போன்ற இப்பாசிசச் சட்டத்தை நீக்கக் கோருவதிலும் நியாயமுண்டு. ஆனால், போலி கம்யூனிஸ்டுகளின் தயவில் நடக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, வடகிழக்கு இந்தியாவின் மாநிலங்கள் முழுவதிலும், இச்சட்டத்தை மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டித்து உத்திரவிட்டுள்ளது. துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட்டுவரும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டில், மனித இரத்தக் கவுச்சி வீசுவதை நீங்கள் இன்னும் உணரவில்லையா?

● முத்து



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 19

இதழ் 10

ஆகஸ்டு 2004

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்



புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.


## குடந்தை: கல்விக் கொள்ளையர்கள் வைத்த தீ!

பள்ளி எனும் கொள்ளி வாய்க்குள் 93 குழந்தைகளைப் பலி கொடுத்துவிட்டு, ஒரு தலைமுறையையே இழந்த சோகத்தில் குடந்தை நகரமே மாளாத் துயரில் மூழ்கியுள்ளது. தங்களது பிள்ளைகளையாவது நாலு எழுத்து படித்து நல்ல வேலைக்குப் போகட்டும் என்ற கனவில் தமது வாயை வயிற்றைக் கட்டி படிக்க வைத்து ஏழைகளின் எதிர்காலம் இன்று இருண்டு விட்டது.

''ஒரே கட்டிடத்தில் மூன்று பள்ளிகளா?'' என்று குடந்தை காசிராமன் தெருவிலுள்ள கொலைகார பள்ளியைப் பார்த்து அதிர்ச்சி தெரிவிக்கின்றன பத்திரிக்கைகள். பள்ளிகளின் யோக்கியதையைப் பற்றி இப்போதுதான் தெரிந்தது போல ஆச்சரியப்படுகின்றார் முதல்வர் ஜெயா; அறிக்கை கேட்கிறது மத்திய அரசு. கல்வித்துறை அதிகாரிகள் நீக்கம், பள்ளியின் தாளாளர் பழனிச்சாமி கைது, விசாரணைக் கமிசன், தமிழகம் முழுவதுமுள்ள பள்ளிகளின் கூரைக் கொட்டகைகள் அகற்ற உத்தரவு என கடும் நடவடிக்கைகள் அறிவிக்கப்படுகின்றன.

முன்னாள் துணைவேந்தரும் கல்வியாளருமான எஸ்.வி. சிட்டிபாபு தலைமையில் 1991-இல் அமைக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கையில், நர்சரிப் பள்ளிகளின் குறைபாடுகளை ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரைகள் தரப்பட்டுள்ளன. 13 ஆண்டுகளாகியும் ஆட்சியிலிருந்த கருணாநிதி அரசோ, ஜெயா அரசோ அவற்றை நிறைவேற்றவே இல்லை. பெரும்பாலான பள்ளிகளில் காற்றோட்டமான வகுப்பறையோ, கழிவறையோ, விளையாட்டு மைதானமோ கிடையாது. சந்து பொந்துகளில் புறாக் கூண்டு போன்ற அறைகளில்தான் தனியார் பள்ளிகளும் நர்சரி பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. இலஞ்சம் வாங்கிக் கொண்டு விதிமுறைகளை மீறித்தான் அதிகார வர்க்கம் இவற்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

1978 வரை தமிழகத்தில் 34 தனியார் மெட்ரிகுலேசன் பள்ளிகள்தான் இருந்தன. இன்றோ, அவை 4500! அரசு உதவி பெறும் தனியார் தொடக்கப் பள்ளிகளோ 7000. இவையல்லாமல் சுமார் 7000 நர்சரிப் பள்ளிகள் எவ்வித அரசு அனுமதியுமின்றி இயங்கி வருகின்றன. இத்தகையப் பள்ளிகளில் ஒன்றுதான், அரசு உதவிபெறும் குடந்தை கிருஷ்ணா தொடக்கப்பள்ளி. இப்பள்ளியின் தாளாளர் பழனிச்சாமி, மக்களைக் கொள்ளையடிப்பதற்கான தொழிலாகக் கல்வியைப் பயன்படுத்தும் முதலாளி. விதிமுறை மீறல், மோசடிகள் ஆகிய அனைத்திற்கும் காரணம் இவனைப் போன்ற கல்வி முதலாளிகளின் இலாபவெறிதான். குழந்தைகளை எரித்த தீ - இந்த முதலாளிகளின் இலாபவெறித் தீ!

எனவே, ''கீற்றுக் கொட்டகைதான் குழந்தைகளின் சாவுக்குக் காரணம்''; ''குறுகிய படிக்கட்டுகள்தான் காரணம்''; ''விதிமுறைகளைக் கறாராக அமல்படுத்தியிருந்தால் விபத்து நடந்திருக்காது'' என்றெல்லாம் அரசும் பத்திரிகைகளும் ஓட்டுக் கட்சித் தலைவர்களும் சித்தரிப்பது, கடைந்தெடுத்த மோசடி. கீற்றுக் கொட்டகை அல்ல பிரச்சினை. காசு இருந்தால் குளுகுளு வசதி செய்யப்பட்ட கான்கிரீட் கட்டிடத்தில் ஆங்கிலக் கல்வியே படிக்க வைக்கலாம். காசு இல்லாத ஏழைகளின் குழந்தைகளுக்கு சத்துணவுக் கூடம், கீற்றுக் கொட்டகை, ஒற்றை வாத்தியார், ஒழுங்கான கல்வி கிடையாது. இதுதான் பிரச்சினை. அரசின் இந்தக் கல்விக் கொள்கையைத் தனது கொள்ளைக்குப் பயன்படுத்திக் கொண்ட புலவன் பழனிச்சாமி ஒரு சின்ன முதலை. சுயநிதிக் கல்லூரிகள் வைத்துக் கொள்ளையிடும் பெருமுதலைகள், ஓட்டுக் கட்சி பிரமுகர்கள், சாராய வியாபாரிகள், சாதிய பிழைப்புவாதிகள், சினிமா கழிசடைகள், சாமியார்கள் போன்றோர் திமிங்கலங்கள்.

கல்வி முதலாளிகளின் இலாபவெறி எனும் தீயினால்தான் குடந்தையில் பள்ளிக் குழந்தைகள் கருகிப் போயுள்ளனர் என்ற உண்மையை மூடி மறைத்துவிட்டு, ஓட்டுப் பொறுக்கிகள் கண்ணீர் அஞ்சலி நாடகமாடுகின்றனர். சுயநிதிக் கல்லூரி முதலாளிகளான நடிகர் விஜயகாந்த், ஜெகத்ரட்சகன், விசுவநாதன், சங்கராச்சாரி போன்றோர் முதல், உலகக் கல்வி முதலாளி போப் வரை அனைவரும் குழந்தைகளைப் பறிகொடுத்த பெற்றோருக்கு ஆறுதல் கூறுகின்றனர். ஆனால், இந்தக் கொள்ளையர்களின் சுயநிதிக் கல்லூரிகளில் இலட்சக்கணக்கில் பணத்தைப் பறிகொடுத்த பெற்றோரும் மாணவர்களும் சென்னை உயர்நீதி மன்றத்தில் நியாயம் கேட்டுக் கதறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொள்ளையர்களிடமிருந்து கல்வித் துறையை மீட்காமல் நம்முடைய பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு உத்தரவாதமில்லை.

குடந்தை நகரப் பெற்றோரின் கண்ணீர், உயர்கல்விக்கு ஏங்கும் ஏழை மாணவர்களின் கண்ணீர், வாழ்விழந்த விவசாயிகளின் கண்ணீர், வேலையிழந்த தொழிலாளர்களின் கண்ணீர், வேலையில்லா இளைஞர்களின் கண்ணீர் - அனைத்திற்கும் காரணம் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கக் கொள்கைதான். கல்வித் துறையிலிருந்து தனியார் முதலாளிகளை விரட்டுவதன் மூலம், தனியார் கல்வி முதலாளிகளையும் அவர்களுக்குத் துணை நிற்கும் அதிகார வர்க்கத்தையும் ஓட்டுப் பொறுக்கிகளையும் மக்களே தண்டிப்பதன் மூலம், குடந்தையில் கருகிய தளிர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்!

www.padippakam.com

# காவிரி - சட்லஜ் நதிநீர் பிரச்சினைகள்:

# மத்திய அரசின் மாற்றாந்தாய் அணுகுமுறை

பஞ்சாப் மாநிலம் அதன் அண்டை மாநிலங்களோடும் மத்திய அரசுடனும் போட்டுக் கொண்டுள்ள இதுவரையிலான எல்லா நதிநீர் ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் திடீரென்று ஒருதலைப்பட்சமாக ரத்து செய்து சட்டமியற்றிவிட்டது. இதற்குப் பஞ்சாப் மாநில சட்டப்பேரவையில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாக ஒப்புதல் அளித்து நிறைவேற்றிக் கொடுத்து விட்டன; ஆளுநரும் உடனடியாகவே கையொப்பமிட்டு ஒரே நாளில் அவசர அவசரமாக அமலுக்கு வந்துவிட்டது.

செய்தி அறிந்ததும் நாடாளுமன்றமே குலுங்கி அதிர்ந்து விட்டது. சம்பந்தப்பட்ட மாநிலங்களின் எம்.பி.க்கள் கட்சி மாறுபாடின்றி தனித்தனி அணியாக திரண்டு கூச்சலும் எதிர்க்கூச்சலும், அமளி - துமளியுமாகிவிட்டது. பிரதமர் நேரடியாகத் தலையிட்டு உடனடியாகப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி அனைவரும் வேண்டுகோள் விடுத்தனர். ''நாட்டின் ஐக்கியம் - ஒருமைப்பாட்டுக்கும், அரசியல் அமைப்புச் சட்டத்துக்கும் கடுமையான நெருக்கடியும் ஆபத்தும் வந்துவிட்டதாக'' மூத்த தலைவர்கள் பதறிப் போய்விட்டனர். பிரதமர் மின்னல் வேகத்தில் செயல்பட்டார். இரவோடு இரவாக புதுதில்லிக்கு வரும்படி பஞ்சாப், அரியானா, இமாசலப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு உத்தரவுகள் பறந்தன. அவர்களுடன் தனித்தனியே பிரதமர் பேசியபிறகு, மத்திய அரசின் அமைச்சரவை ஆலோசனைக் குழுகூடி, உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் கோருவதென்று முடிவு செய்து, அடுத்து அவ்வாறே செய்துள்ளது.

1947 இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையைத் தொடர்ந்து, அடுத்த சில ஆண்டுகளிலேயே இரு நாடுகளுக்கிடையிலான நதிநீர் ஒப்பந்தம் உருவானது. இந்த இரு நீண்டகாலப் பகைநாடுகளுக்கிடையிலான நதிநீர் ஒப்பந்தம் குறிப்பிடத்தகுந்த பாதிப்பின்றித் தொடரும் அதேசமயம், அதனால் கிடைக்கும் நீரைப் பகிர்ந்து கொள்வதில் இந்திய மாநிலங்களிடையிலான மோதல் தீராப் பிரச்சினையாகி நெருக்கடியில் சிக்குண்டு கிடக்கிறது. பிரிவினைக்கு முந்தைய கிழக்கு பஞ்சாபில் ஏற்கெனவே இருந்த பாசன வசதியோடு, பாகிஸ்தானுடனான ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கும் ராவி-பியாஸ் மற்றும் சட்லஜ் ஆறுகளின் உபரி நீரை, இன்றைய பஞ்சாப் - அரியானாவை உள்ளடக்கியிருந்த பஞ்சாப் மாநிலம், இராஜஸ்தானோடு பகிர்ந்து கொள்ளும் திட்டம் மத்திய அரசினால் 1950-களில் உருவாக்கப்பட்டது. பஞ்சாப் மற்றும் இந்தி பேசும் மக்களுக்கு தனித்தனி மாநிலமாக பஞ்சாப் பிரிக்கப்பட வேண்டும் என்ற அகாலிதள தலைமையிலான பஞ்சாபியரின் கோரிக்கையை ஏற்று, இந்திராகாந்தி தலைமையிலான மத்திய அரசு 1966-இல் அதை அமலாக்கி அரியானா என்ற தனிமாநிலம் உருவாகியது.

அப்போது இந்திரா அரசு கொடுத்த சில வாக்குறுதிகள் 38 ஆண்டுகளாகியும் இப்போதும் நிறைவேற்றப்படவில்லை. சண்டிகர் பஞ்சாபின் தலைநகராக்கப்படும், அதற்கீடாக பல ஆயிரம் கோடி ரூபாய் அரியானாவுக்குத் தரப்படும் என்ற வாக்குறுதி இன்னமும் நிறைவேறாமல், சண்டிகர் இரு மாநில தலைநகராகவும், யூனியன் பிரதேசமாகவுமே நீடிக்கிறது. ராவி-பியாஸ், சட்லஜ் ஆற்று நீர் பகிர்வுக்கு நியாயமான தீர்வு காணப்படும் என்றும் வாக்குறுதி தரப்பட்டது. அதுவும் தீர்க்கப்படாமல் பத்தாண்டுகளுக்கு மேல் நீடித்தது. 1976-ஆம் ஆண்டில் இந்திரா தலைமையிலான அவசரநிலைக்கால ஆட்சி, எதேச்சதிகாரமான முறையில் ஒரு அறிவிக்கை மூலம் நதிநீர் பங்கீடு முறையை பஞ்சாப் - அரியானா மீது திணித்தது. இருமாநில அரசுகளுமே அதை ஏற்காமல் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் போட்டன.

1981-இல் பஞ்சாப், அரியானா, இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களிலும் காங்கிரசு ஆட்சி நிலவுவதைச் சாதகமாக்கிக் கொண்டு ஒரு ஒப்பந்தத்தை இந்திரா காந்தி அரசு திணித்தது. அதன்படி இராஜஸ்தான் இந்திராகாந்தி கால்வாய் திட்டமும் அரியானாவுக்கு அதன் பங்கு நீரை வழங்கும் சட்லஜ் - யமுனா கால்வாய்த் திட்டமும் உருவாகின. முதலாவது திட்டம் முழுமையடைந்தது; இரண்டாவது திட்டத்துக்காக பல ஆயிரம் கோடி நிதி செலவிடப்பட்டதாகக் கணக்கு இருந்தாலும் பெயரளவுக்கே நகர்ந்தது. அப்போது செல்வாக்குப் பெற்றிருந்த காலிஸ்தானி தீவிரவாதிகள் முதல் அகாலிதளம் வரை கடுமையாக பஞ்சாபில் எதிர்ப்புக் கிளம்பியதுதான் இதற்குக் காரணம். சட்லஜ் - யமுனா இணைப்புக் கால்வாய் ஓரளவு நிர்மாணிக்கப்பட்ட பகுதிகளிலும் காலிஸ்தானிகளால் தகர்க்கப்பட்டது; அதன் கட்டுமான அதிகாரிகள் கொல்லப்பட்டனர். சூழ்ச்சிகளாலும் பாசிச அடக்குமுறையாலும் பஞ்சாப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எத்தணித்த இந்திரா, இறுதியில் அதற்கே பலியானார்; பிறகு வந்த இராஜீவ் காந்தி, அகாலி தலைவர் லோங்கோவாலுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு அதில் நதிநீர் பிரச்சினையில் பஞ்சாபுக்கு நியாயமான பங்கு வழங்கப்படும் என்று வாக்குறுதியும் அளித்தார். அதற்காக ஒப்பந்தப்படி நீதிபதி எராடி தலைமையில் தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டு அதன் தீர்ப்பும் 1987-இல் வெளிவந்தது; ஆனால் அத்தீர்ப்பு நடைமுறைக்கு வரவில்லை.

தன் பங்குக்கு, தன் பகுதியில் கால்வாயைக் கட்டி வைத்துக் கொண்டு சட்லஜ் ஆற்று நீருக்காகக் காத்திருக்கும் அரியானா அரசு, சட்லஜ் - யமுனா இணைப்புக் கால்வாய் பணியை முடித்துத் தரும்படி உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டது. அதன்பேரில் இந்த இணைப்புக் கால்வாயின் கட்டுமானப் பணியை 2004 ஜூன் 15-க்குள் மத்திய அரசு மேற்கொள்ளவேண்டும்; பஞ்சாப் அரசும் அப்பணியை கைமாற்றித் தரவேண்டும் என்று உத்திரவு போட்டது. உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை நிறைவேற்ற மறுப்பதற்காகத்தான் அவசர அவசரமாக இதுவரையிலான எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் ரத்து செய்யும் சட்டத்தை பஞ்சாப் அரசு நிறைவேற்றியுள்ளது.

ராவி-பியாஸ்-சட்லஜ் ஆறுகளின் நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையிலும் காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையிலும் வரலாற்றுக் காரணிகள், பின்னணிகள் வேறுவேறானவை; என்றாலும் இரண்டு விவகாரங்களையும், குறிப்



படிப்பகம்

www.padippakam.com

பாக இரண்டையும் மத்திய அரசும் (எந்தக் கட்சி எந்தக் கூட்டணி அரசானாலும்) உச்ச நீதிமன்றம் உட்பட அதிகார வர்க்கமும் கையாளும் விதம், இரண்டுக்கும் தீர்வு காண்பதில் இவை காட்டும் அவசரம், அக்கறை - அவசியம் ஆகியவை காரணமாக ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியாது.

பாகிஸ்தானுடன் நதிநீர் பங்கீட்டுக்கான இந்தியா நடத்திய பேச்சு வார்த்தையின் போது, பிரிவினைக்கு முந்தைய அந்தந்த நாடுகளின் பாசன வசதிக்கான நீர்ப்பங்கீடு அப்படியே அங்கீகரிக்கப்பட்டு உபரிநீர் பங்கீட்டுக்காகவே ஒப்பந்தம் போடப்பட்டது. ஆனால் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுக்கான பிரச்சினையில் தமிழ்நாட்டின் ஏற்கெனவே நிலவும் அனுபோக உரிமை பராமரிக்கப்படவில்லை. பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் எதுவுமின்றி கர்நாடக அரசே தன்னிச்சையாகப் புதுப்புது அணைகளை நிர்மாணித்துக் கொண்டு பாசனப்பகுதிகளை விரிவுபடுத்திக் கொண்டது.

தலைமடை என்பதால் சிறப்பான உரிமை எடுத்துக் கொண்டு தேவையான அளவு நீரைப் பயன்படுத்திக் கொண்டு, கழிவு நீரைக் கடைமடைப் பகுதிக்கு திருப்பி விடும் உரிமை யாருக்கும் கிடையாது. வறட்சி என்றாலும் சரி, வெள்ளமென்றாலும் கடைமடைப் பகுதிதான் துன்பம், துயரத்தை அனுபவிக்க வேண்டும் என்பது ஏற்கக் கூடியதல்ல. தலைமடை மாநிலம், கடைமடை மாநிலம் இரண்டுக்கும் ஆற்று நீரில் சம உரிமை உண்டு. இந்த அடிப்படை நிலையை மறுத்து, காவிரியின் தலைமடை மாநிலமான கர்நாடகா, நீரையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது வெள்ளநீரை கடைமடைப் பகுதிக்குத் திறந்துவிட்டு எப்போதும் சாதகமானதையே ஏகபோகமாக அனுபவிக்கிறது; பாதகமானதை தமிழகத்தின் மீது தள்ளிவிடுகிறது.

மேலும் 1972-இல் காவிரி நதிநீர்ப் பங்கீட்டைப் புதுப்பித்துக் கொள்ள மறுத்து, பேச்சு வார்த்தையிலும் தனது நிலையையே வலிந்து நின்று எந்த முடிவுக்கும் வரவிடாமல் காலம் தாழ்த்துவது, பரிசீலனை, மேல்முறையீடு, தட்டிக் கழிப்பது, இழுத்தடிப்பது போன்ற தந்திரங்களை மேற்கொள்கிறது. ராவி-பியாஸ்-சட்லஜ் நதிநீர் பங்கீடு பிரச்சினையில் மின்னல் வேகத்தில் செயல்படும் மத்திய அரசு காவிரிப் பிரச்சினையில் கர்நாடகாவின் சூழ்ச்சி, தந்திரம், நிர்பந்தங்களுக்குப் பணிந்து, தமிழகத்திடம் மாற்றாந்தாய் மனப்போக்கை மேற்கொண்டு வருகிறது.





காவிரியில் தண்ணீர் திறந்து விட மன்றாடி, கர்நாடக முதல்வர் தரம் சிங்குக்குப் (இடமிருந்து இரண்டாவது) பொன்னாடை போர்த்தி விடும் தி.மு.க. கூட்டணிக் குழு (மேல் படம்). இதற்குப் போட்டியாக கர்நாடக முதல்வரைப் பார்த்து, தஞ்சாவூர் தட்டைத் தரும் அ.தி.மு.க. குழு. (கீழ் படம்) கபினி அணையை வெள்ள அபாயத்தில் இருந்து பாதுகாப்பதற்காக கர்நாடகா உபரி நீரைத்தான் திறந்து விட்டது. தி.மு.க. கூட்டணியும், அ.தி.மு.க.வும் அதை தங்களின் சாதனையாகப் பீற்றிக் கொண்டு தமிழக மக்களை ஏய்க்கின்றன.

தமிழக - தஞ்சை விவசாயிகள் உச்ச நீதிமன்றத்துக்குப் போயும், போராட்டங்கள் நடத்தியும், நிர்பந்தித்த பிறகே காவிரி நதிநீர் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. அதேபோன்ற மேல்முறையீடு, நிர்பந்தத்துக்குப் பிறகே இடைக்காலத் தீர்ப்பும் பெற்றது. அதையும் எதிர்த்து, இன்றைய பஞ்சாப் அரசைப் போலவே அவசரச் சட்டம் போட்டு கர்நாடக அரசு அடாவடி செய்தது. தீர்ப்பாயத்தின் இடைக்காலத் தீர்ப்பையும் அமலாக்க மறுத்து, மீண்டும் முறையீடு, போராட்டம், நிர்பந்தங்களுக்குப் பிறகுதான் மத்திய அரசு அரசாணையில் வெளியிட்டது. இருந்தபோதும், அதை அமலாக்க மறுத்து வருகிறது. அதன் பிறகு காவிரி நதிநீர் ஆணையம் மற்றும் நதிநீர் கட்டுப்பாட்டு கமிட்டி ஆகிய இரண்டு அதிகாரமற்ற அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இவை இருந்தும் கூட, ஒவ்வொரு ஆண்டும் கர்நாடகா மற்றும் தில்லி அரசுக்கும் உச்ச நீதிமன்றத்துக்கும் காவடி தூக்குவதும், அதற்கும் முடிவு எதுவும் காணப்படாமல் இழுத்தடிப்பதும் தொடர்கிறது. காவிரி நதிநீர் ஆணையம், மத்திய அமைச்சரவை, உச்ச நீதிமன்றம் ஆகிய எந்த அமைப்பின் உத்தரவையும் அமலாக்க அடாவடியாக மறுக்கும் கர்நாடகாவின் மீது எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், பஞ்சாப் அரசு பழைய நதிநீர் பங்கீடு ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை ரத்து செய்யும் சட்டம் இயற்றியதும், பதறி அடித்துக் கொண்டு தீர்வு காண விழைகிறது மத்திய அரசு. காரணம், இதனால் பாதிக்கப்படுபவை தலைநகர் தில்லியும், அரியானா, ராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசம் ஆகிய இந்தி பேசும் மாநிலங்களும் ஆகும். அவற்றைப் போல தமிழகம் ஆளுவோரின் அக்கறைக்குரியதல்ல. இங்குள்ள ஓட்டுக் கட்சிகளும் மாநில நலன்களில் உறுதியான அக்கறை கொண்டவையல்ல; சுயநலன்களுக்காக எதற்கும் விலை போகத் தயாராக உள்ளவை.

காவிரில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டும்படி கோரும் - போராடும் தமிழக மக்களுக்குப் பதில் சொல்வதை விட்டு, ''நதிநீர் இணைப்புதான் ஒரே வழி'' என்று திசை திருப்பும் அதிபர் அப்துல் கலாம் முதல் நடிகர் ரஜினிகாந்த் வரை பித்தலாட்டம் செய்யும் மோசடிப் பேர்வழிகளுக்கு ராவி-பியாஸ்-சட்லஜ் இணைப்புத் திட்ட ஒப்பந்தம் இதோ நார்நாராகக் கிழிபடுவது முகத்தில் அறைவதாக உள்ளது. நாட்டிலுள்ள தேசிய இனங்கள் ஒவ்வொன்றுக்கும் நதிநீர்ப் பங்கீட்டில் உள்ள நியாய உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதில் ''நதிகள் இணைப்பு என்ற திட்டம்'', இந்திய ஒருமைப்பாடு - ஐக்கியம் - இந்திய தேசியம் என்பதைப் போலவே தேசிய இனங்கள் மீது ஒரு தலைபட்சமாகத் திணிப்பதாகவே இருக்கும். சுயவிருப்பு - ஜனநாயகம் - சமத்துவ அடிப்படையிலான ஒற்றுமை - ஐக்கியம் என்பதைப் போலவே, தேசிய இனங்களுக்கிடையிலான சம உரிமை, அனுபோக உரிமை - சமநீதி - ஜனநாயக அடிப்படையிலான நதிநீர்ப் பங்கீடுதான் நீடித்ததாக இருக்க முடியும்.

● மாணிக்கவாசகம்

www.padippakam.com

# பட்ஜெட்:

# மீண்டும் அதே பாதையில்...

பாரா வண்டியில் மலையளவு சுமையை ஏற்றி விட்டு, அதை இழுக்க முடியாமல் மாடு திணறும்போது அதைச் சவுக்கால் அடித்து விரட்டினானாம் வண்டிக்காரன். அடிதாங்க முடியாமலும் பாரத்தை இழுக்க முடியாமலும் மாடு சுருண்டு படுத்துக் கொண்டதும், அதற்குத் தண்ணீரைக் கொடுத்து ஆசுவாசப்படுத்தி, "என் ராசா, கிளம்புடா; உனக்குப் பருத்திக் கொட்டையும், புண்ணாக்கும் வாங்கித் தருகிறேன்" என்று தடவிக் கொடுத்துத் தட்டி எழுப்பி பாரா வண்டியை இழுக்கச் செய்தானாம். இப்படித்தான் காங்கிரசுக் கயவாளிகளின் பொருளாதாரக் கொள்கையும் அமைந்துள்ளது.

தனியார்மய - தாராளமயத்தின் வெறிபிடித்த தாக்குதலால் நிலைகுலைந்து, வேலையிழந்து வாழ்விழந்த மக்கள், இந்துவெறி ஆட்சியாளர்களுக்கு மாற்றாக காங்கிரசுக் கூட்டணிக்குத் தேர்தலில் வாக்களித்து வெற்றி பெறச் செய்தார்கள். காங்கிரசுக் கயவாளிகளோ, மக்களின் அதிருப்திக்கு வடிகால் வெட்டும் முயற்சியாக பழைய சவுக்கடி அணுகுமுறைக்குப் பதிலாக, சற்று தடவிக் கொடுத்து, மெதுவாக அந்தப் பார வண்டியைக் கொண்டு செல்லக் கிளம்பியுள்ளனர்.

அதே தனியார்மயம் - தாராளமயம் எனும் மறுகாலனியாதிக்க பாரா வண்டிதான். அதைத் தாங்க முடியாமல் திணறுவது மக்களாகிய மாடுகள்தான். அதே வண்டியோட்டியாகிய நிதியமைச்சர்தான். நாட்டை மீண்டும் அடிமையாக்கும் அதே சுடுகாட்டுப் பாதையில் விரைவாகச் செல்ல முடியாத நிலையில், சற்று ஆசுவாசப்படுத்தி மெதுவாக வண்டியைக் கொண்டு செல்வதுதான் காங்கிரசு ஆட்சியாளர்களின் புதிய உத்தி.

இதன்படி, விசைத்தறி நெசவாளர்களுக்கு "சென்வாட்" வரி நீக்கம், கைத்தறி நெசவாளர்களுக்கு சிட்டா நூலுக்கான கலால் வரி நீக்கம், குடிசை தீப்பெட்டி தொழிலைப் பாதுகாக்க இயந்திர தீப்பெட்டிகளுக்கு கலால் வரி உயர்வு, மாதச் சம்பளதாரர்களுக்கு வருமான வரி விலக்கு வரம்பு ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ. 1 லட்சமாக உயர்வு, உற்பத்தித்துறையை விரிவாக்க ஆண்டுக்கு 100 தொழிற்கல்வி நிலையங்களை உருவாக்குவது, சென்னையில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்துக்கு ஆயிரம் கோடி ஒதுக்கீடு, நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ. 30,000 கோடி முதலீடு, விவசாயிகளுக்கான கடனுதவித் திட்டம், உயர் கல்விக்கு வங்கிகளில் கல்விக் கடனுதவி என்று ஜனரஞ்சகமாக பட்ஜெட்டில் அறிவித்துவிட்டு, நயவஞ்சகமாகத் தாக்குதலைத் தொடுத்துள்ளார் நிதியமைச்சர். இதை, "மலர்களிலிருந்து தேனீக்கள் தேனை எடுப்பதுபோல அரசுக்கு வருவாயை ஈட்டுவோம்" என்று சித்தரிக்கிறார்.

அண்டப்புளுகு - ஆகாசப் புளுகையெல்லாம் விஞ்சும் வகையில் சில கவர்ச்சிவாத அறிவிப்புகளை வெளியிட்டு நயவஞ்சகத் தாக்குதல் தொடுக்கும் சிதம்பரத்தின் பட்ஜெட்டை முதலாளித்துவப் பத்திரிகைகள் அனைத்தும் புகழ்ந்து தள்ளுகின்றன. "சாமானிய மக்களுக்கான பட்ஜெட்; விவசாயத்துக்கும் கிராமப்புற வளர்ச்சிக்கும் ஊக்கம் தரும் பட்ஜெட்" என்றெல்லாம் ஊதிப் பெருக்குகின்றன. போலி கம்யூனிஸ்டுகள் கூட, "இது மாற்றுப் பாதையில் அமைந்துள்ள பட்ஜெட்; விவசாயத்துக்கு முன்னுரிமை தரும் பட்ஜெட்" என்று துதிபாடுகின்றனர்.

ஆனால் சிதம்பரத்தின் பட்ஜெட், ஏற்கெனவே பின்பற்றி வரும் நாட்டை மறுகாலனியாக்கும் பொருளாதாரக் கொள்கை வழியிலான பட்ஜெட்தானே தவிர, மாற்றுப் பாதையோ - விவசாயத்துக்கு முன்னுரிமை தரும் வளர்ச்சிப் பாதையிலான பட்ஜெட்டோ அல்ல. முந்தைய பா.ஜ.க. அரசின் திட்டங்களையே பெயர் மாற்றி அலங்காரம் செய்து ஏய்க்கும் மோசடியைத் தவிர, அதில் புதிய மாற்றுப் பாதை என்று எதுவுமே கிடையாது.

முந்தைய பா.ஜ.க. அரசின் நிதியமைச்சரான ஜஸ்வந்த் சிங் கடந்த பிப்ரவரியில் சமர்ப்பித்த இடைக்கால பட்ஜெட்டில் வேளாண்மைக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவுக்குத்தான் ப.சிதம்பரமும் பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்துள்ளார். 2003-04 -இல் வேளாண்மைக்கான ஒதுக்கீடு ரூ. 3,671 கோடியாக இருந்தது. 2004-05-க்கான பட்ஜெட்டில் இது ரூ. 4,643 கோடியாக உயர்ந்தள்ளது. அதேசமயம் கிராமப்புற மேம்பாடுக்கான ஒதுக்கீடு ரூ. 15,519 கோடியிலிருந்து இப்போது ரூ. 11,456 கோடியாகச் சுருங்கிவிட்டது. மேலும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ரூ. 9,640 கோடியிலிருந்து இப்போது ரூ. 4,590 கோடியாக வெட்டிச்சுருக்கப்பட்டு விட்டது. கிராமப்புற மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புக்கான ஒதுக்கீடுகளை வெட்டிவிட்டு, விவசாயத்துக்குக் கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளதாகப் பித்தலாட்டம் செய்கிறார் ப. சிதம்பரம்.

காங்கிரசு கூட்டணி அரசின் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில், வறுமையிலுள்ள குடும்பத்தில் ஒருவருக்கு ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் போவதாக அறிவித்திருந்தனர். இப்போது பட்ஜெட்டில், ஏற்கெனவே இருந்த ஒதுக்கீட்டையும் வெட்டிச் சுருக்கி விட்டீர்களே என்று கேட்டால், இந்த வாக்குறுதியை நிறைவேற்ற திட்டக் கமிசனுக்கு ரூ. 10,000 கோடி சிறப்பு ஒதுக்கீடு செய்துள்ளேன் என்று பம்மாத்து செய்கிறார் ப.சிதம்பரம்.

ஆனால், மக்கள் தொகையில் ஐந்தில் இரண்டு பங்கினராக உள்ள வறுமையிலுள்ள கிராமப்புற ஏழைக் குடும்பங்களில், மூன்றில் ஒரு பங்கினருக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலைவாய்ப்பளிக்கவும் இதற்கான முதலீட்டுச் செலவுகளுக்கும் ஆண்டுக்கு ரூ. 45,000 கோடிக்கும் மேலாக தேவை. இந்த நிலையில் கிராமப்புற மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு என்பது வெறும் காகிதத்தில்தான் இருக்கும். மேலும் 2% மேல்வரி மூலம் திரட்டப்படவுள்ள சிறப்பு ஒதுக்கீடு தொகையான ரூ. 10,000 கோடியில் ஏறத்தாழ ரூ. 4,910 கோடி கல்விக்காக திருப்பி விடப்படவுள்ளது. எஞ்சியுள்ள ரூ. 5,100 கோடியில்தான் கிராமப்புற மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.


படிப்பகம்

www.padippakam.com

எனவேதான், வேலைவாய்ப்பு உத்தர வாதச் சட்டம் பற்றி சிதம்பரத்தின் பட் ஜெட்டில் எந்த அறிவிப்பும் இல்லை. உண்மையில், ஒட்டுமொத்த கிராமப் புற மேம்பாட்டுக்கான ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிட 39% குறைந்துள்ளது.

பாழாகிக் கிடக்கும் ஏரிகள், குளங் கள், கண்மாய்களைச் சீரமைக்க ''பெ ரும்திட்டம்'' என்று வாய்ப்பந்தல் போடும் நிதியமைச்சர், இதற்கென வெறும் 100 கோடிகளையே ஒதுக்கி யுள்ளார். பல்லாயிரம் கோடி ரூபாய் தேவைப்படும் இத்திட்டம் 5 முதல் 7 ஆண்டுகளில் செயல்படுத்தப்படுமாம். ஆனால், இதற்கான நிதியை எங்கிருந்து திரட்டப் போகிறார் என்று எந்த அறிவிப் பும் பட்ஜெட்டில் இல்லை. இதே போல அனைவருக் கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர், இல வச மின்சாரம், பின் தங்கிய மாநிலங்க ளுக்கு சிறப்பு நிதி முதலான பட்ஜெட் டில் அறிவிக்கப்பட் டுள்ள திட்டங்க ளுக்குத் தேவை யான நிதி எங்கி ருந்து வரும் என்பது பற்றி பட்ஜெட்டில் ஒரு வார்த்தையும் இல்லை.

பாரம்பரிய விவசாயத்துக்குப் பதிலாக, தோட்டக் கலை, பால் பண்ணை, உணவு பதனிடுதல், விவசா யம் சார்ந்த வர்த்த கம் முதலானவற் றுக்கு ஒதுக்கீடு களை அதிகரித்துச் சலுகைகளையும் நிதியமைச்சர் அளித் துள்ளார். உணவு தானியங்களைப் பயி ரிடும் பாரம்பரிய விவசாயத்தை நாச மாக்கி, மலர்ப்பண்ணை, தேக்குப் பண்ணை, வெனிலா எசன்ஸ்க்கான பண்ணை, மூலிகைப் பண்ணை என்று ஏற்றுமதி அடிப்படையிலான விவசா யத்துக்கு ஊக்கமளிப்பதோடு, ஏற்கெ னவே தரிசு நில மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் பண்ணை விவசாயத்தில் ஊடு ருவிய அன்னிய ஏகபோக நிறுவனங்க ளுக்குச் சேவை செய்யும் வகையில் தான் இது அமைந்துள்ளது.

இந்தியாவின் மொத்த சாகுபடி நிலத்தில் 5% பரப்பளவில்தான் பருத்தி பயிரிடப்படுகிறது. ஆனால் ஒட்டு மொத்தமாகப் பயன்படுத்தப்படும் உரம் - பூச்சி மருந்துகளில் 55% பருத் திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. இந்நிலையில், விவசாயிகளுக்கு உரமா னியம் தொடரும் என்று நிதியமைச்சர் அறிவித்துள்ளார். இந்த மானியம் இர சாயன உரம் - பூச்சி மருந்து நிறுவனங்க ளுக்குத் தான் போய்ச் சேருமே தவிர, இதனால் விவசாயிகளுக்கு எந்தப் பல னுமில்லை.

உணவு தானியங்கள் - பால் பொருட்கள் உள்ளிட்டு இறக்குமதி கட் டுப்பாடுகள் நீக்கம், அரசு கொள்முதல் அடியோடு நீக்கம், விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை வீழ்ச்சி, இடுபொ ருள் செலவு உயர்வு என்ற மறுகாலனி யாதிக்க நச்சு வளையத்தில் விவசாயத் தையும் விவசாயிகளையும் சிக்க வைத்து விட்டு விவசாயத்துக்கான கட னுதவியை அதிகரித்துள்ளதாகப் பீற்றிக் கொள்கிறார் சிதம்பரம். விவசாயிக ளுக்கு இதனால் கடன் சுமை அதிகரிக் குமே தவிர, விவசாயிகளோ விவசா யமோ மேம்பாடு அடைய முடியாது.



நேற்றுவரை கந்துவட்டிக்காரனிடம் கடன்பட்டு தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள், இனி அரசு வங் கிகளிடம் கடனாளியாகித் தற்கொலை செய்து கொள்வார்கள்.

கவர்ச்சிவாத சவடால்கள் மூலம் விவசாயிகளை வஞ்சிக்கும் நிதியமைச் சர், இராணுவத்துக்கு 77,000 கோடி களை வாரியிறைத்துள்ளார். கடந்த ஆண்டின் பட்ஜெட் ஒதுக்கீட்டை விட இது ரூ. 16,700 கோடி அதிகம். இரா ணுவத்தினருக்கான பென்ஷன் மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சக செலவுக ளையும் சேர்த்தால் மொத்தம் ரூ. 89,082 கோடி இரா ணுவத்துக்கு ஒதுக் கப்பட்டுள்ளது. பாகிஸ்தானுடன் மீண்டும் நட்புறவு - பேச்சுவார்த்தை, சீனாவுடன் பஞ்சசீ லக் கொள்கை அடிப்படையில் நட் புறவு என்ற நாடக மாடிக் கொண்டே வெறிபிடித்த ஆயு தக் குவிப்பில் ஆட் சியாளர்கள் இறங்கி யுள்ளனர். ''சுகோய்'', ''ஹாக்'' போர் விமானங் களை வாங்க வேண் டியிருப்பதால் ஒரே நேரத்தில் இந்த அதிகரிப்பு ஏற்பட் டுள்ளது என்கிறார் ப.சி. ஆனால், விவ சாயம், வேலை வாய்ப்பு, சமூக நலத்துக்கு அவசி யம் கருதி ஒரே நேரத்தில் ஒதுக் கீட்டை அதிகரிக்க அவர் முன்வர வில்லை.

தாராளமயமாக்கலின் மூலம் ஏற்கெ னவே சிறுதொழில் துறையைக் குப்புற வீழ்த்திய காங்கிரசு கயவாளிகள், இப் போது குழியையும் பறித்துச் சமாதி கட் டக் கிளம்பி விட்டனர். கடந்த 13 ஆண் டுகளாகப் பின்பற்றப்படும் தாராளமய - உலகமயக் கொள்கையால் நாடு தழு விய அளவில் சுமார் 8.68 லட்சம் சிறு தொழில் நிறுவனங்கள் நலிவடைந்து மூடப்பட்டு, ஏறத்தாழ ஒரு கோடி தொழிலாளர்கள் வேலையிழந்துள்ள னர். சிறுதொழில் நிறுவனங்கள் மூட லில் தமிழகம்தான் முதலிடம் வகிக்கி றது. கடந்த பத்தாண்டுகளில் தமிழகத்


படிப்பகம்

www.padippakam.com

தில் 1.41 லட்சம் சிறுதொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. தமிழகத்தின் ஒட்டுமொத்த சிறுதொழில் நிறுவனங்களில் இது ஏறத்தாழ 46% ஆகும்.

சிறுதொழில் துறையின் நலனைக் காக்க ஒரு சிறப்பு செயல் திட்டம் வெளியிடப்படும் என்று மைய அரசின் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் அறிவித்திருந்தனர். அதுபோலவே இரும்பைக் கச்சாப் பொருளாகப் பயன்படுத்தும் சிறுதொழில் - குறுந்தொழில் நிறுவனங்களின் நலனைப் பாதுகாக்க ''இரும்பு ஒழுங்குமுறை கமிசன்'' அமைக்கப்படும் என்றனர். ஆனால், இந்த வாக்குறுதிகள் காற்றோடு கரைந்து விட்டன. மறுபுறம், சிறுதொழில் நிறுவனங்களை முடமாக்கி மூடுவிழாவை விரைவுபடுத்தும் வகையில் அதிரடி தாக்குதல்களை பட்ஜெட்டில் அறிவித்துள்ளார் ப.சிதம்பரம்.

சிறுதொழில் துறைக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொழில்களிலிருந்து 85 தொழில்களுக்கு விலக்கு அளித்துள்ளார் சிதம்பரம். இதன்மூலம் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் உள்நாட்டு தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களுடன் சிறுதொழில் நிறுவனங்கள் போட்டியிட வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளி விட்டுள்ளார். அதாவது, ''சிறு தொழில் துறைக்கென ஒதுக்கப்பட்ட நட்டு - போல்ட்டு, ஸ்பிரிங், கிளிப்புகளைக் கூட இனி ஏகபோக நிறுவனங்கள் தயாரிக்கலாம்; அவற்றோடு போட்டி போட்டு உன் தொழிலைப் பாதுகாத்துக் கொள்'' என்கிறார் செட்டிநாட்டு சிங்கம். ஏற்கெனவே கச்சாப் பொருட்களின் விலை உயர்வு, மின்கட்டண உயர்வு முதலானவற்றாலும் ஆர்டர் இல்லாமலும் சிறு தொழி நிறுவனங்கள் நலிவடைந்து கிடக்கும்போது இத்தகைய கொள்கை அறிவிப்பானது, சிறுதொழில் நிறுவனங்களின் மூடுவிழாவை மேலும் தீவிரப்படுத்தவே செய்யும்.

இத்தனையும் போதாதென்று, இரும்பு மீதான ஆயத்தீர்வை 8% லிருந்து 12% ஆக பட்ஜெட்டில் உயர்த்தப்பட்டுள்ளது. இந்தச் சுமையைத் தாங்க முடியாமல் இரும்பைக் கச்சாப் பொருளாகப் பயன்படுத்தும் பல சிறுதொழில் நிறுவனங்கள் முடமாகிப் போகும். இதுதவிர இரும்பு - உருக்கு உற்பத்திப் பொருட்களுக்கான இறக்குமதி வரி 15% லிருந்து 10% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக அன்னிய இறக்குமதி அதிகரித்து, உள்நாட்டு இரும்பு - உருக்கு சிறுதொழில் - குறுந்தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்படும். ஏற்கெனவே நலிவடைந்து முடமாகிவிட்ட சிறுதொழில் நிறுவனங்கள் இனி நிரந்தரமாக மரணப் படுக்கையில் வீழ்த்தப்படும்.

இதுபோலவே, இலாபமீட்டும் பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட மாட்டாது என்று குறைந்தபட்சப் பொதுத்திட்டத்தில் அறிவித்த காங்கிரசு ஆட்சியாளர்கள், கோடிக்கணக்கில் இலாபமீட்டிவரும் தொலைபேசி, காப்பீடு, விமானத்துறை ஆகியவற்றைத் தனியார்மயமாக்க இத்துறைகளில் அன்னிய முதலீட்டைசிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றுள்ளனர். தொலை தொடர்புத் துறையில் அன்னிய முதலீடு 49% ஆக இருந்த வரம்பைத் தளர்த்தி 74% ஆக பட்ஜெட்டில் உயர்த்தியுள்ளார் ப.சிதம்பரம். இதுபோலவே, காப்பீடு துறையில் அன்னிய முதலீடு 26% லிருந்து 49% ஆகவும், விமானப் போக்குவரத்துத் துறையில் 40% லிருந்து 49% ஆகவும் உயர்த்தி ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாச சேவை செய்துள்ளார். இதுதவிர, அன்னிய முதலீட்டு நிறுவனங்கள் கடன் திட்டங்களில் முதலீடு செய்வதற்கான உச்சவரம்பு 100 கோடி டாலரிலிருந்து 175 கோடி டாலராக உயர்த்தியுள்ளார். தனியார்மயமாக்கலில் இந்து வெறி ஆட்சியாளர்கள் எட்டடி பாய்ந்தால் ப. சிதம்பரம் பதினாறு அடி பாய்ந்து ஏகாதிபத்தியங்களின் இரும்புப் பிடியில் இந்திய நாட்டைத் தள்ளி விட்டுள்ளார்.

உலகில் எந்த நாட்டிலும் தொலைத் தொடர்புத் துறையில் 25%-க்கு மேல் அன்னிய மூலதனம் அனுமதிக்கப்படவில்லை. ஆனால், இந்தியாவில் 74% அன்னிய மூலதனத்துக்குத் தாராள அனுமதியளித்து, நாட்டை வளர்ச்சிப் பாதையில் இழுத்துச் செல்லப் போகிறார்களாம் காங்கிரசு கயவாளிகள். 1956-இல் ரூ. 5 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்ட ஆயுள் காப்பீடு கழகத்தின் இன்றைய சொத்து மதிப்பு ரூ. 3 லட்சம் கோடி; 1,14,000 பேருக்கு வேலை வாய்ப்பு. இத்துறையில் அன்னிய மூலதனம் அதிகரித்தால், இத்துறையைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்துவதாக அமெரிக்கா மாறிவிடும். அதன்பிறகு விவசாயம், சாலைப் போக்குவரத்து, ரயில்வே, வீடு கட்டுதல், மின்துறை மற்றும் மத்திய - மாநில அரசுகளுக்கு காப்பீடு துறை அளித்து வந்த உதவிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு, அமெரிக்க எஜமானர்கள் சொல்வதே சட்டமாகும். உள்நாட்டுச் சீட்டுக் கம்பெனிக்காரனிடம் ஏமாந்தவர்களுக்கே நிவாரணம் கிடைக்காதபோது, உலக சீட்டுக் கம்பெனிக்காரனிடம் நாட்டாமை கொடுத்தால் என்னவாகும் என்று சொல்லத் தேவையில்லை.

அரசுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்கமாட்டோம் என்று ஒருபுறம் அறிவித்துக் கொண்டே, அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியார் - அன்னிய நிறுவனங்களுக்கு விற்பதன் மூலம் ரூ. 4000 கோடியை நடப்பு நிதியாண்டில் திரட்ட காங்கிரசு கூட்டணி அரசு தீர்மானித்துள்ளது. கடந்த ஆண்டில் அரசுத்துறை நிறுவனங்களின் பங்கு விற்பனை ரூ. 15,000 கோடியாக இலக்கு தீர்மானிக்கப்பட்டது. அதை ஒப்பிடும்போது நடப்பாண்டில் அதன் வேகம் குறைந்துள்ளது. அதாவது, தனியார்மய சுடுகாட்டுப் பாதையில் சென்றாலும் சற்று நிதானமாகவே செல்வோம் என்பதுதான் கூட்டணி அரசின் கொள்கை.

''குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை நாங்கள்தான் உருவாக்கினோம்; அதனடிப்படையில்தான் கூட்டணி அரசு செயல்படுகிறது'' என்று மார்தட்டிக் கொண்ட போலி கம்யூனிஸ்டுகள், இப்போது அதே மறுகாலனியாதிக்கப் பாதையில் அமைந்துள்ள பட்ஜெட் மோசடிகளை எதிர்த்து வாய் திறக்க முடியாமல் பம்முகின்றனர். தொலைபேசி - காப்பீடு துறைகளில் நேரடி அன்னிய மூலதன அதிகரிப்பைக் கண்டு முணுமுணுக்கும் போலிகள், தாங்கள் ஆளும் மே. வங்கத்தில் அன்னிய முதலீடுகளை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்பதோடு, தொழிலாளர்கள் போராடினால் ஒடுக்குவோம் என்று வெளிப்படையாகவே எச்சரிக்கின்றனர். அன்னிய முதலீட்டுப் பெருக்கம் நாட்டுக்கு அழிவைத்தரும் என்றால், மே.வங்கத்தில் மட்டும் அது வளர்ச்சிக்கானதா என்று கேட்டு முதலாளித்துவப் பத்திரிக்கைகளே போலிகளின் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்துகின்றன. இதை எதிர்கொள்ள முடியாமல் நழுவும் போலி கம்யூனிஸ்டுகள், தொலைபேசி - காப்பீடு துறைகளில் தமது தொழிற்சங்கங்களை வைத்து அடையாள எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி, தமது சிவப்புச் சாயம் கலைந்துவிடாமல் தப்பித்துக் கொள்ளத் துடிக்கின்றனர். இச்சந்தர்ப்பவாதிகளை அம்பலப்படுத்தி முறியடிப்பதோடு, நாட்டையும் மக்களையும் மீண்டும் அடிமையாக்கும் பாதையில் நயவஞ்சகத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ள காங்கிரசு கயவாளிகளுக்கு எதிராகப் போராடுவதே உழைக்கும் மக்களின் உடனடிக் கடமையாக உள்ளது.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

### பெர்னாண்டசுக்கு ஆடை அவிழ்ப்பு:

# அமெரிக்காவின் எஜமானத்தனம்


''நடிகைகளின் தொப்புளில் 'ஆம்லெட்' போடுவது அல்லது பம்பரம் விடுவது போன்ற காட்சிகளில் ஆபாசம் எங்கிருக்கிறது? கவர்ச்சி தானே இருக்கிறது!'' என்று வாதிடும் சினிமா கழிசடைகள் போலவே, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அமெரிக்க விமான நிலையத்தில் சோதனை என்ற பெயரில், தான் ''ஆடை அவிழ்க்கப்பட்டதற்கு'' பல்வேறு 'தத்துவார்த்த' விளக்கங்களை வழங்கி இருக்கிறார். பார்ப்பன பயங்கரவாதிகளின் அமெரிக்க அடிமைத் தனத்தை எஜமானர்கள் இவ்வளவு சீக்கிரம் போட்டு உடைப்பார்கள் என்று பா.ஜ.க வகையறாக்கள் எதிர்பார்க்கவில்லை.

வாஜ்பாய், அத்வானி போன்ற மூல விக்ரகங்கள் எஜமானனிடம் கல்லடிப்பட்ட சொறிநாய்கள் போல ஈன குரலில் முனகுகின்றனர். ''இது விசயமாக ஜார்ஜ் எங்களிடம் எதுவும் சொல்லவில்லை'' என்கின்றனர்.

2002-ஆம் ஆண்டு மற்றும் 2003-ஆம் ஆண்டு, ஆக இருமுறை அமெரிக்காவின் நியூயார்க் டல்லாஸ் விமான நிலையத்தில் வைத்து, இந்திய நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், அமெரிக்கக் குடியுரிமை கண்காணிப்பு அதிகாரிகளால் ஆடை அவிழ்க்கப்பட்டு சோதனை செய்யப்பட்டார். இந்திய தூதரக அதிகாரிகளின் எதிர்ப்பையும் மீறி இது நடந்துள்ளது.

இந்த உண்மை, இப்போது அமெரிக்காவில் புத்தகமாக வெளிவந்து நாறுகிறது. ஈராக், அபு-கிரைப் சிறைச்சாலை சித்திரவதைகளை 'வீடியோ' எடுத்து மகிழ்ந்தது போலவே, இந்திய நாட்டின் பாதுகாப்பு அமைச்சரின் ஆடை அவிழ்ப்பைக் கூவி விற்கிறது, அமெரிக்கா!

ஆனால், அமெரிக்க அதிபர் கிளிண்டன் இந்தியா வந்தபோது அமெரிக்க உளவுப்படை கும்பல் முதலில் வந்து இந்தியாவை நோட்டமிட்டது. இந்திய அதிகாரிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் நம்பிக்கையற்று, பயண பாதுகாப்பு ஏற்பாடுகளை வான், தரை வழி - தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டது. இப்படி இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் சுயாதிபத்திய உரிமைகளை நாடு புகுந்து நிர்வாணப்படுத்திய தைரியத்தில்தான் அமெரிக்காவிலும் ஆடையை அவிழ்க்கிறது.



இதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்திய எஜமானர்கள் இந்தியா போன்ற அடிமை நாடுகளின் ஆட்சியாளர்களுக்கு என்ன சொல்கிறார்கள்?

''உன் நாட்டுக்கு நீ ராஜாவாக இருந்தால் எனக்கென்ன? 'நாடுகளுக்கு இடையிலான உறவில் சமத்துவம், சகோதரத்துவம் பேண வேண்டும் என்ற அடிமைகளின் ஏக்கத்திற்கு எல்லாம் நாங்கள் எப்படி பொறுப்பாக முடியும்?'' என்கிறார்கள்.

அதிகார வர்க்கப் பார்ப்பன கும்பல் இதையே வேறுமாதிரி சொல்கிறது. ''அமெரிக்காவின் பாதுகாப்பு முறைகளில் நாம் எப்படி தலையிட முடியும்'' என்று பத்திரிக்கைகளில் (ஆடை அவிழ்ப்புக்கு உள்ளானவர்களைப் பட்டியல் போட்டு) நக்கலடிக்கிறது.

இந்திய நாட்டையும் மக்களையும் அவமதிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த ஈனச் செயலை, இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஏன் தலைவணங்கி ஏற்றுக் கொண்டார்?

இந்திய நாடாளுமன்ற விவாதங்களில் வெளிநடப்பு, புறக்கணிப்பு என்று பல போராட்டங்களை நடத்திய 'ஜனநாயகவாதி' ஜார்ஜ் பெர்னாண்டஸ் அமெரிக்க அதிகாரிகள் தன்னை ஆடை அவிழ்த்த பிறகும் ஏன் அமெரிக்க பயணத்தைப் புறக்கணித்து நாடு திரும்பவில்லை?

இப்படி ஆயிரம் கேள்விகள் எழுப்பினாலும் பதில் ஒன்றுதான்!

பார்ப்பன பயங்கரவாதக் கும்பலுக்கு சுயமரியாதை, தன்மானம், தேசப்பற்று, நாட்டு நலன் என்பதெல்லாம் பதவிகளை அடைவதற்கும் அனுபவிப்பதற்குமான முகமூடிகள் மட்டுமே! ஆனால், ஏகாதிபத்திய


படிப்பகம்

www.padippakam.com

விசுவாசம் என்பது, அக்கும்பலின் ரத்தத்தோடு கலந்த நெருடலற்ற இயல்பான ஒன்று!

அமெரிக்க ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு மட்டுமல்ல, அவர்களின் மோப்ப நாய்களுக்கும் உள்ள உரிமைகளை அவற்றிடம் கடிபடும் அடிமைகளே கூறுவதை கேளுங்கள்: ''அமெரிக்கா போனா, ஷூவையும் சாக்ஸையும் மட்டும் கழற்றச் சொல்வார்கள். அது வழக்கமான நடைமுறைதான். ஜார்ஜ் இதை மிகைப்படுத்தி நிர்வாணம் என்கிறாரோ என்னவோ'' என்கிறார், முன்னாள் இந்தியத் துணைப் பிரதமர் அத்வானி. அதன்பிறகு ஜார்ஜ் பெர்னாண்டஸ் 'ஆமாம், ஆமாம், கோட்டைத்தான் கழட்டினார்கள், என் கையைத்தான் மேலும் கீழும் ஆட்டினார்கள்' என்றார்!

ஜார்ஜ் பெர்னாண்டஸ் என்றாலே தன்மானத்தின் அடையாளம் - சுயமரியாதை சிங்கம் என்பதாக, தலித் தலைவர் திருமாவும் தமிழினவாதிகளும் தமிழகத்தில் ஏலம் போடுகிறார்கள். ஆனால், ஜார்ஜ் பெர்னாண்டஸ் தன் ஆடையைகூட அமெரிக்காவிடம் அடகு வைத்துவிட்டு, அமைச்சர் பதவியைச்சுற்றிக் கொண்டு திரிந்தவர்!

குறைந்தபட்சம் தனக்கு நேர்ந்த அவமானத்தை வெளிப்படுத்தி உலக அரங்கில் அமெரிக்காவைத் தலை குனிய வைப்பது என்ற சொரணை கூட இல்லாமல், 'அடியில் நிர்வாணமாக இருந்தால் என்ன? தலையில் கிரீடம் இருந்தால் போதும்!' என்று கமுக்கமாக கார்கில் வீரராக வலம் வந்தார்!

இந்த அரசியல் கழிசடைகளை எதில் சேர்ப்பது? இந்த லட்சணத்தில் 'தொன்மை வாய்ந்த இந்திய கலாச்சாரத்தின் வாரிசுகள் நாங்கள்தான்' என்று குதிக்கிறார்கள். ஆனால், அமெரிக்க எஜமானனின் நிழலைக் கண்டால் கூட மண்டியிட்டு சிலுவை குறியிட்டு கொள்கிறார்கள். எனவேதான், வளர்ப்பு பிராணிகளுக்கு எதற்கு 'கோட்டு - சூட்டு' என்று உருவி இருக்கிறது, அமெரிக்க அதிகார வர்க்கக் கும்பல்!

இந்த ஆடை அவிழ்ப்பு நடைமுறையை அடிமைகள் நிரம்பிய இந்திய நாடாளுமன்றமும் ஏற்றுக் கொண்டது! அதனால்தான் அமெரிக்காவின் அவமதிப்பை எதிர்த்து ஒரு கண்டனத் தீர்மானம் கூட கொண்டு வர வில்லை!

● பச்சையப்பன்

# வில்லியம் ஹிண்டன்: கம்யூனிச சீனாவின் அமெரிக்க மனசாட்சி

புரட்சி என்பது உழைக்கும் மக்களின் திருவிழா என்றார் லெனின். அது வர்க்கப் போராட்டப் பெருவிழா. சர்வதேச உணர்வோடும், வரலாற்றின் உந்து சக்திகளான மக்களின் மீது மாளாக் காதலோடும், கம்யூனிசத்தின் மீது நம்பிக்கையோடும் அத்தகைய புரட்சித் திருவிழாக்களில் பங்கேற்று - அதன் வேகத்தையும் கோபத்தையும், வெற்றியையும் தோல்வியையும், தேக்கத்தையும் பாய்ச்சலையும் உய்த்துணர்ந்து எழுதும் சாதாரண மனிதர்களின் குறிப்புகளும் கட்டுரைகளும் மாபெரும் வரலாற்றுக் காவியமாக உயர்ந்து நிற்கின்றன. இப்படித்தான் எட்கர் ஸ்னோ எழுதிய ''சீனாவை வியாபித்துள்ள சிவப்பு நட்சத்திரம்'' என்ற நூலும், மைக்கேல் சேயர்ஸ் - ஆல்பர்ட் இ. கான் ஆகியோர் எழுதிய ''மாபெரும் சதி'' என்ற நூலும், அன்னா லூயி ஸ்ட்ராங் எழுதிய, ''ஸ்டாலின் சகாப்தம்'' என்ற நூலும், ஜான் ரீடு எழுதிய ''உலகைக் குலுக்கிய பத்து நாட்கள்'' என்ற நூலும் உலகப் புகழ் பெற்றன. அந்த வரிசையில் வில்லியம் ஹிண்டன் என்ற அமெரிக்கர் எழுதிய ''ஃபேன்ஷென்'' என்ற நூல் உலகெங்கிலுமுள்ள கம்யூனிஸ்டுகளாலும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளாலும் பெரிதும் மதிக்கப்படுகிறது.

அமெரிக்கப் படைத்துணைக்குழு ஊழியராக இருந்த வில்லியம் ஹிண்டன் 1942-இல் ''சீனாவை வியாபித்துள்ள சிவப்பு நட்சத்திரம்'' என்ற நூலைப் படித்தார். அது அவரது உலகக் கண்ணோட்டத்தை முற்றாக மாற்றியமைத்து, மார்க்சியக் கண்ணோட்டத்தைப் பெற உதவியது. அமெரிக்காவின் போர்த் தகவல் குழு ஊழியராக 1945-இல் அவர் சீனாவுக்குச் சென்றார். தோழர் மாசேதுங் தலைமையிலான சீன கம்யூனிஸ்ட் கட்சி, புதிய ஜனநாயகப் புரட்சிப் போரில் இறுதி வெற்றியை நெருங்கிக் கொண்டிருந்த நேரமது. சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பிற்போக்கு கோமிண்டாங் அரசுக்குமிடையே நடந்த சமாதான பேச்சுவார்த்தைகளில் அமெரிக்க நடுவர் குழு ஊழியராகப் பணியாற்றிய அவர், தோழர் மாவோவையும் தோழர் சௌஎன்லாயையும் சந்தித்து உரையாடி புதிய நம்பிக்கையைப் பெற்றார்.



உலகெங்கிலும் உள்ள கம்யூனிச புரட்சியாளர்களின் உற்ற நண்பனாக இருந்து, மறைந்த வில்லியம் ஹிண்டன்.

பின்னர் ஐ.நா. மன்றத்தின் புனர்வாழ்வு நிர்வாகத்தின் மூலம் சீனாவுக்கு அனுப்பப்பட்ட டிராக்டர்களை இயக்கப் பயிற்சி அளிக்கும் குழுவின் ஊழியராக அவர் மீண்டும் 1947-இல் சீனாவுக்கு வந்தார். பிற்போக்கு கொமிண்டாங் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்பட பணிக்கப்பட்ட அவர், அங்கு நடக்கும் ஊழல் - மோசடிகளைக் கண்டு வெறுப்படைந்து, தெற்கு ஹுபெய் மாகாணத்தில் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான விடுதலைப் பிரதேசத்துக்குச் சென்று உற்சாகமடைந்து, அர்ப்பணிப்புடன் விவசாயிகளுக்குச் சேவை செய்தார். விடுதலைப் பிரதேசங்களில் நவீன எந்திரங்களைக் கொண்டு விவசாயம் செய்யும் புதிய வழிமுறைகளை அவர் உடனிருந்து விவசாயிகளுக்குக் கற்றுக் கொடுத்தார். பின்னர் ஷான்சி விடுதலைப் பிரதேசத்திலுள்ள பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியராகச் செயல்பட்டார். அப்பல்கலைக் கழகத்தின் மூலம் நிறுவப்பட்ட நிலச்சீர்திருத்தப் பணிக்கான பயிற்சிக் குழுவில் இணைந்து அவர் லாங்போவ் எனும் கிராமத்துக்குச் சென்றார். அங்கு அவர் விவசாயிகளுடன் ஐக்கியப்பட்டு விவசாய வேலைகளைச் செய்ததோடு, நிலச்சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விவசா


படிப்பகம்


www.padippakam.com

யிகளின் கூட்டங்களிலும் பங்கேற்று குறிப்புகள் எடுத்துக் கொண்டார்.

சீனப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து லாங்போவ் கிராமத்தில் நிலச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதல், கம்யூனிஸ்டுகளின் முன்னுதாரணம்; விவசாயம், அறுவடை, கொள்முதல், விநியோகம், மருத்துவம், கல்வி, சுகாதாரம் என அனைத்தையும் நிர்வகிக்கும் சாதாரண விவசாயிகளின் செயல்திறன், பல்வேறு வர்க்கங்களின் நலன்களும் சிந்தனைகளும் முட்டி மோதும் ஜனநாயக ரீதியிலான விவாதங்கள், அதையொட்டிய முடிவுகள், முடிவுகளைக் கறாராகச் செயல்படுத்தும் உறுதி, திசை விலகல்களுக்கு எதிரான போராட்டம் ஆகிய அனைத்தையும் கண்ணாரக் கண்டு வியந்து, குறிப்புகளையும், கட்டுரைகளையும் எழுதியதோடு விவசாயப் புரட்சிக் கமிட்டியின் கூட்டக் குறிப்பு ஆவணங்களையும், தீர்மானங்களையும் அவர் சேகரித்தார்.

1953-இல் அவர் அமெரிக்கா திரும்பியதும், அமெரிக்க அரசு அவர் சேகரித்த குறிப்புகளையும் ஆவணங்களையும் பறிமுதல் செய்தது. சீன உளவாளியாகக் கருதப்பட்ட அவரது கடவுச் சீட்டையும் (பாஸ்போர்ட்) அமெரிக்க அரசு முடக்கியது. அவர் எந்த வழியிலும் ஆசிரியப் பணியைச் செய்யக் கூடாது என்று தடை விதித்தது. வேறு வழியின்றி அவர் தனது பெற்றோரது நிலத்தில் விவசாயம் செய்து வந்தார். இருப்பினும், தனது குறிப்புகளைத் திரும்ப ஒப்படைக்கக் கோரி நீதிமன்றத்தில் முறையிட்டுத் தொடர்ந்து போராடினார். 13 ஆண்டு காலப் போராட்டத்துக்குப் பிறகு, இறுதியில் அக்குறிப்புகளைத் திரும்பப் பெற்றார்.

இக்குறிப்புகளைக் கொண்டு லாங்போவ் கிராமத்தில் நிலச்சீர்திருத்தம் எவ்வாறு புரட்சிகரமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை 1966-இல் ஓர் ஆவணமாகத் தொகுத்து, அதற்கு ''ஃபேன்ஷென்'' என்ற தலைப்பிட்டார். இது அமெரிக்காவின் ''மன்த்லி ரெவ்யூ'' என்ற இடதுசாரி இதழில் வெளிவந்து, பல்லாயிரக் கணக்கில் விற்பனையானது. பின்னர் அது பத்துக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பல நாடுகளில் பரபரப்பாக விற்பனையாகியது. டேவிட்ஹாரே என்ற பிரபல நாடகாசிரியர் ஃபேன்ஷென் நூலை மேடை நாடகமாக்கி இலண்டனில் முதன்முதலாக அரங்கேற்றினர். அதன் பின்னர் அந்நாடகம் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் பலமுறை நிகழ்த்தப்பட்டது. தோழர் செள என்லாயின் முன்முயற்சியால் ஃபேன்ஷென் நூல் சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, கோடிக்கணக்கான சீன மக்களின் வரவேற்பைப் பெற்றது.




மாவோவின் மறைவுக்குப் பின் சீனாவில் ஆட்சியையும் கட்சியையும் கைப்பற்றிய முதலாளித்துவ பாதையாளர்களை அம்பலப்படுத்தி வில்லியம் ஹிண்டன் எழுதிய ''முடிவுறாத யுத்தத்தில் சீனா'' என்ற கட்டுரை தொகுப்பு நூலின் முகப்பு.

1971-இல் மீண்டும் சீனாவுக்கு வந்த அவர், தனது சேமிப்புகளையெல்லாம் தொடுத்து விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி வளர்த்த லாங்போவ் கிராமத்துக்குச் சென்றார். அங்கு சோசலிசக் கூட்டுப் பண்ணைகள் வளர்ந்து செழிப்பதைக் கண்டு பெருமிதம் கொண்டார். ''லாங்போங் கிராமம் எனது இரண்டாவது தாய்வீடு'' என்று உணர்ச்சி பொங்க குறிப்பிட்ட அவர், மீண்டும் விவசாயிகளுடன் கலந்துறவாடி செஞ்சீனத்தின் மாபெரும் சாதனைகளை ''அயர்ன் ஆக்சென்'' ''ஷென்ஃபேன்'' ஆகிய நூல்களில் தொகுத்தார்.

**எதையும் நடைமுறையைக் கொண்டு உரசிப் பார்த்த வில்லியம் ஹிண்டன் மாவோவின் மறைவுக்குப் பிறகு சீனாவின் ஆட்சியையும் கட்சியையும் கைப்பற்றிக் கொண்ட முதலாளித்துவப் பாதையாளர்களான டெங்சியாவோபிங் தலைமையிலான கும்பலைக் கடுமையாக விமர்சித்தார்.**

அவர் தொழில்முறை எழுத்தாளரல்ல; மார்க்சிய கோட்பாட்டு ஆய்வாளருமல்ல. நடைமுறை அனுபவங்களிலிருந்து படிப்பினைகளைப் பெறுவதும், மக்களுக்குச் சேவை செய்வதுமான எளிய மனிதராகவே அவர் செயல்பட்டார். சீன விவசாயிகளை தனது சொந்த சகோதரர்களாகப் பாவித்தார். எதையும் நடைமுறையைக் கொண்டு உரசிப் பார்த்த அவர், மாவோவின் மறைவுக்குப் பிறகு சீனாவின் ஆட்சியையும் கட்சியையும் கைப்பற்றிக் கொண்ட முதலாளித்துவப் பாதையாளர்களான டெங்சியாவோ பிங் தலைமையிலான கும்பலைக் கடுமையாக விமர்சித்தார். தோழர் மாவோவால் தொடங்கப்பட்ட மகத்தான கலாச்சார புரட்சியை டெங் கும்பல் இழிவுபடுத்தி அவதூறு செய்ததை அவர் ஆவேசமாகச் சாடினார்.

முதலாளித்துவப் பாதையாளர்களான டெங் கும்பலை விமர்சித்து அவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து ''முடிவுறாத யுத்தத்தில் சீனா'' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். சீனாவில் இன்னுமொரு புரட்சி காத்திருக்கிறது என்று அந்நூலில் அறுதியிட்டார். உலகின் பல நாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்து புரட்சிகர - ஜனநாயக சக்திகளுடன் நட்பையும் உறவையும் வளர்க்க அவர் முயற்சிகள் மேற்கொண்டார். கம்யூனிசத்தின் மகத்தான சாதனைகளையும் ஏகாதிபத்திய உலகின் இழிந்த நிலையையும் ஒப்பிட்டுக் காட்டி உழைக்கும் மக்களுக்கு நம்பிக்கையூட்டினார்.

இதய நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த இந்த எளிய மனிதர், கடந்த மே 15-ஆம் நாளன்று தனது 85-வது வயதில் இயற்கை எய்தினார். சீனாவின் லாங்போவ் கிராமத்து விவசாயிகள் மட்டுமின்றி, உலகெங்கிலுமுள்ள புரட்சிகர - ஜனநாயக சக்திகள் தமது உற்ற நண்பரை இழந்துவிட்ட வேதனையில் தத்தளிக்கின்றனர்.

கம்யூனிச நேர்மையும் நடைமுறையும் சர்வதேசிய உணர்வும் கொண்ட வில்லியம் ஹிண்டனின் நினைவுகளை நெஞ்சிலே ஏந்துவோம்! நடைமுறையிலிருந்து கற்றறிவது - கற்பிப்பது என்ற அவரது புரட்சிகர நடைமுறையைப் பின்பற்றுவதன் மூலம் அவருக்கு உண்மையான அஞ்சலியைச் செலுத்துவோம்!

● பாலன்


படிப்பகம்

www.padippakam.com

### இறால் பண்ணை அழிப்பு:

# போராளிகள் மீது பொய்வழக்கு - அடக்குமுறை தீர்ப்பு எழுதும் முன்பே தண்டனை

தமிழ்நாட்டில், குறிப்பாக நாகை - திருவாரூர் மாவட்டத்தில் ஏராளமாக அமைக்கப்பட்டுள்ள இறால் பண்ணைகள், நவீன உப்பளங்களாலும் மண்ணும், நிலத்தடி நீரும், கடல் வாழ் உயிரினங்களும் நஞ்சாகி விவசாயிகளும் மீனவர்களும் வாழ்விழந்து போயுள்ளனர். இவற்றை அப்புறப்படுத்தும்படி பல நீதிமன்றத் தீர்ப்புகள் இருந்தும், எந்தக் கட்சி ஆட்சியானாலும் அத்தீர்ப்புகளை மதிப்பதில்லை; இறால் பண்ணை மற்றும் நவீன உப்பள முதலாளிகளின் நாசவேலைக்கு துணை நிற்கின்றன.

இந்தப் போக்கை சகித்துக் கொள்ள முடியாத திருவாரூர் மாவட்டம் தில்லைவிளாகம் கிராம விவசாயிகளும் மீனவர்களும் ஊராட்சி மன்றத் தலைவர் தோழர் யோகநாதன் தலைமையில் ஒன்றுதிரண்டு கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களைப் புறக்கணித்து விட்டு இறால் பண்ணைகளையும் நவீன உப்பளங்களையும் அழிக்கும் போராட்டத்தில் குதித்தனர். அவர்களின் நேரடி நடவடிக்கையால் அவை அழிக்கப்பட்டன.

நீதிமன்ற உத்திரவுகளை அமலாக்க மறுத்து வந்த ஆட்சி நிர்வாகம், போலீசை ஏவி தில்லைவிளாக மக்கள் 72 பேரைக் கைது செய்து, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகக் கூறி பொய் வழக்குப் போட்டு திருச்சி சிறையில் அடைத்தது. மேலும் 78 பேர் மீது அதே வழக்குப் போட்டு மிரட்டியது. 68 நாட்களுக்குப் பிறகு 5000 ரூபாய் ரொக்கம் கட்டி, திருச்சியிலேயே தங்கி, காலை - மாலை போலீசு நிலையத்தில் கையொப்பம் போடும் நிபந்தனையுடன் பிணையில் விட்டுள்ளது.

தில்லைவிளாகம் விவசாயிகள் - மீனவர்கள் மீதான பொய் வழக்கை ரத்து செய்யவும், இறால் பண்ணைகள் - நவீன உப்பளங்களைத் தடை செய்து அகற்றவும் கோரி, திருச்சி - மெயின் கார்டு கேட் அண்ணாசிலை அருகே கடந்த 19-ஆம் தேதி ம.க.இ.க., பெல் - பாயிலர் பிளாண்ட் தொழிற்சங்கம் மற்றும் பிற தோழமை அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்தின. இந்த அமைப்புகள் சார்பாக, தோழர்கள் நாராயணசாமி, இராமதாசு ஆகியோர் அரசின் தனியார்மய, தாராளமய, உலகமயக் கொள்கைகளின் பாதிப்புகள் தாம் குடந்தை தீ விபத்து மற்றும் தில்லைவிளாகம் இறால் பண்ணைகள் ஏற்படுத்திய அழிவுகள் என்று பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய, தில்லைவிளாக ஊராட்சி மன்றத் தலைவர் தோழர். யோகநாதன் தனது உரையில், தில்லைவிளாகத்தின் செழிப்பு, அங்குள்ள மாங்குரோவ் காடுகளின் சிறப்பு, மீன்பிடித்து வாழும் ஆயிரக்கணக்கான மீனவர்களின் உழைப்பு, இவற்றையெல்லாம் பாதுகாப்பதாக கூறி கோடிகோடியாக செலவிடுவதாக கூறும் மத்திய - மாநில அரசுகளின் பம்மாத்து ஆகியவற்றை விளக்கி, இறால் பண்ணை முதலாளிகள் மூலிகைகள் பயிரிடப் போவதாக அப்பாவி விவசாயிகளை ஏமாற்றி நிலம் பறித்த அவலத்தையும், அந்த நிலங்களில் இறால் பண்ணைகளையும் இரசாயன உப்பளங்களையும் அமைத்ததையும் அதன் விளைவாக பகுதி மக்கள் சொறி நோயால் பாதிக்கப்பட்டது, விவசாயம் நாசமானது, மீன்பிடித்தொழில் பாதிக்கப்பட்டது பற்றியும் விளக்கினார். இதன் காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பசி - பட்டினி கொடுமைகளுக்கு ஆளானதும், இதை விளக்கி மத்திய - மாநில அரசுகளுக்குத் தெரியப்படுத்த பல்வேறு இயக்கங்களை எடுத்து, அவற்றில் பலனில்லாததால்தான் இனி பொறுக்க முடியாதென இறால் பண்ணைகளை அழித்தோம் என்றார். பேச்சு வார்த்தைக்கு அழைத்து வஞ்சகமாக கைது செய்யப்பட்டதையும், +2 படிக்கும் மாணவர்கள் கூட சிறைக் கொடுமைக்கு உள்ளாகும் அடக்குமுறைகளையும் விளக்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றும் தில்லைவிளாகம் ஊராட்சிமன்றத் தலைவர் யோகநாதன்.




— பு.ஜ. செய்தியாளர், திருச்சி

# ஊழல் கொள்ளைக்கு எதிராக ஒரு தனிமனிதனின் போராட்டம்

சென்னை - எண்ணூர் அனல்மின் நிலையத்தில் உயர் அதிகாரிகள் நடத்திவரும் கூட்டுக் கொள்ளையை எதிர்த்து ஒரு உதவிப் பொறியாளர் தன்னந்தனியாகப் போராடி வருகிறார். அவர் பெயர் வைரமணி.

மின்வாரியத்தில் பல இலட்சங்களை விழுங்கிய அதிகார வர்க்க கும்பலின் ஊழலை ஒரு வழக்கின் மூலம் வெளிக் கொணர்ந்துள்ள திரு. வைரமணிக்குத் தொடர்ந்து தொல்லை கொடுப்பது, பணியிடமாற்றம், குற்றவாளி என தண்டனை ஆணை, பதவி உயர்வு பறிப்பு, மிரட்டி அச்சுறுத்துவது என்று எல்லா அடக்குமுறைகளையும் பழிவாங்கலையும் ஏவி விட்டு தனது ஊழல் கொள்ளையை மூடிமறைக்க எத்தணிக்கிறது, உயரதிகார கும்பல்.

இக்கொடுமைகளுக்கு எதிராகவும் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் - பாதிப்புகளுக்காகவும் உயர் நீதிமன்றத்தில் வைரமணி மானநட்ட வழக்கு தொடுத்துள்ள போதிலும், இதுவரை விசாரிக்கப்படாமல் முடங்கிக் கிடக்கிறது.

கடந்த ஈராண்டுகளாகத் தனிமனிதராக சட்ட ரீதியாகப் போராடிவரும் திரு. வைரமணி, மின்வாரிய உயரதிகாரிகளின் கூட்டுக் கொள்ளையை எதிர்த்தும், தனக்கு இழைக்கப்பட்ட அநீதி - அவமானங்களைக் கண்டித்தும் எண்ணூர் அனல் மின் நிலைய வாயிலருகே வரும் 12.8.04 முதலாக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளார். ஊழல் பெருச்சாளிகளான உயரதிகார வர்க்க கும்பலை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும்; பொதுச் சொத்து கொள்ளை போகாமல் தடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

மின்வாரியத்தில் நடக்கும் ஊழல் கொள்ளை பற்றியும் தனிமனிதராக வைரமணி தளராமல் நடத்தி வரும் போராட்டம் பற்றிய செய்தியும் வருமிதழில் வெளிவரும். •


படிப்பகம்

www.padippakam.com

# மக்களை அச்சுறுத்திய அரசு சாராயக் கடைக்கு மூடுவிழா!

பண்பாடற்ற பகற்கொள்ளைக் கூட்டமான ஜெயா-சசி கும்பல் தமது சொந்த சீமைச் சாராயச் சரக்கை ஏகபோகமாக விற்பதற்காக, சாராயக் கடைகளை அரசே ஏற்று நடத்தும்படி செய்துள்ளது.

இதன் விளைவாக, திருச்சி தில்லை நகரில் பொதுமக்கள் குடியிருக்கும் பகுதியில் கோலாகலமாக பார் வசதியுடன் 'டாஸ்மாக்' (அரசு) சாராயக் கடை வைத்து நடத்தப்பட்டது. குடிமகன்களிலேயே பொறுக்கிகளும் ரௌடிகளும் இங்கு குடித்துவிட்டு நடுத்தெருவில் கிடந்து புரள்வதும், அசிங்கமான சொற்களால் அநாகரிகமாக போவோர் வருவோரைத் திட்டுவதும், பள்ளிக்குப் போகும் சிறுமிகளை வழிமறிப்பதும், சிறுசிறு கற்களால் அடிப்பதும், தரக்குறைவாகப் பேசுவதும், கடைகளில் வாங்கும் பொருட்களுக்குக் காசு தர மறுப்பதும், உணவு விடுதிகளில் சாப்பிட்டுவிட்டு காசு தர மறுப்பதுமாக தகராறு செய்தனர். தெரு விளக்குகள் கூட அடித்து நொறுக்கப்படுகின்றன.



மக்கள் குடியிருப்புப் பகுதி, பள்ளி, மருத்துவமனை, கோவில்களுக்கு அருகே சாராயக் கடை நடத்தக் கூடாது என்ற அரசு விதி, அரசாலேயே அப்பட்டமாக மீறப்பட்டு, தாங்கள் பாதிக்கப்படுவதாகவும் அதை உடனே அகற்ற வேண்டும் என்றும் கோரி மக்கள் கலை இலக்கியக் கழகம் சார்பாக சுவரொட்டி மற்றும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. பெண்கள் பலர் உட்பட பொதுமக்களைத் திரட்டி ஊர்வலமாகப் போய் மாவட்டாட்சியரிடம் கோரிக்கை வைத்தனர். முதலில் பொது இடத்தில் சாராயக் கடை இருப்பதை நியாயப்படுத்திய மாவட்ட ஆட்சியர், மக்களின் உறுதி கண்டு, கோரிக்கையை ஏற்று, அடுத்த நாள் அரசு அதிகாரிகளை கருத்துக் கேட்பு என்ற பெயரில் அனுப்பினார். அதிகாரிகளைச் சூழ்ந்து கொண்ட மக்கள் கேள்வி மேல் கேள்வி எழுப்பி திணறடித்த பிறகு "டாஸ்மாக்" கடையை மூடும் கோரிக்கையை ஏற்று அவ்வாறே செய்தனர். ம.க.இ.க. வின் முயற்சி, பகுதி மக்களின் வரவேற்பைப் பெற்றதோடு அதைச் சுவரொட்டியாகவும் அச்சிட்டுப் பாராட்டினர்.

— பு.ஜ. செய்தியாளர், திருச்சி

# வேர்விடும் சங்கமும் முளைத்தெழும் சங்கமும்

தனியார்மய - தாராளமயத் தாக்குதலாலும் கருப்புச் சட்டங்களாலும் தொழிலாளர்களின் வாழ்வுரிமையும் தொழிற்சங்க உரிமையும் பறிக்கப்படும் இன்றைய சூழலில், உதிரித் தொழிலாளர்களை சங்கமாகத் திரட்டுவதும், அச்சங்கத்தைப் போராட்டப் பாதையில் கட்டி வளர்ப்பதும் மிகவும் கடினமானதொரு பணி. இப்பணியை உவப்புடன் ஏற்று, **ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கத்தைத் தொடங்கி** கடந்த 4 ஆண்டுகளாக போர்க்குணத்துடனும் ஜனநாயக ரீதியிலான அமைப்பு முறைகளுடனும் திருச்ச நகர ஆட்டோ தொழிலாளர்கள் வளர்த்தெடுத்துள்ளனர். இந்தச் சங்கம் எத்தனை நாள் நீடிக்கும்? இவர்கள் என்ன சாதித்துவிட முடியும்? என்று ஏளனம் செய்தோர் ஏராளம்.

ஆனால், போக்குவரத்து போலீசாரின் அடாவடி - அட்டூழியங்களை துணிவாக எதிர்த்து நின்று போராடி, ஆட்டோ ஓட்டுநர்களுக்குப் பாதுகாப்பும் மக்களிடம் மரியாதையும் பெற்றுத் தந்த ஒரே சங்கம், ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கம்தான்!

கடந்த 11.7.04 அன்று மாலை திருச்சி தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் இச்சங்கத்தின் நான்காமாண்டு பொதுக்குழு கூட்டமும் புதிய நிர்வாகிகள் தேர்வும் நடைபெற்றது. திருச்சி மாவட்ட ஆ.ஓ.பா. சங்கத்தின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் செல்வராசு, பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி உரையாற்றினார். இக்கூட்டத்தில், வழக்குரைஞர்கள், தொழிற்சங்க முன்னோடிகள், தோழமை அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பு.ஜ.தொ.மு. பொதுச்செயலர் தோழர் சுப. தங்கராசு, தலைவர் தோழர் முகுந்தன் ஆகியோர் வாழ்த்து கூறி சிறப்புரையாற்றினர்.

இதைத் தொடர்ந்து, இதே அரங்கில், அவலத்திலும் கொத்தடிமைத்தனத்திலும் உழலும் ஓட்டல் தொழிலாளர்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்க, **"ஓட்டல் தொழிலாளர் பாதுகாப்புச் சங்கம்"** எனும் புதிய சங்கத்தின் தொடக்கவிழா நடைபெற்றது. இச்சங்கத்தைத் தொடங்கி வைத்து தோழர் சுப. தங்கராசு உரையாற்றினார். இச்சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் ஞானசேகரன், புதிய நிர்வாகிகளை அறிமுகப்படுத்தினார். நிகழ்ச்சியின் இறுதியில் நடந்த, ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் வர்க்கப் போராட்ட உணர்வூட்டும் புரட்சிகர கலை நிகழ்ச்சி பெருத்த வரவேற்பைப் பெற்றது.




— ஆ.ஓ.பா.ச., திருச்சி


படிப்பகம்

www.padippakam.com

# "கல்விக் கொள்ளைக்குத் தீ வைப்போம்"!

## — புரட்சிகர அமைப்புகளின் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

மக்களின் அடிப்படை உரிமையான கட்டாய இலவசக் கல்வியை அரசின் பொறுப்பிலிருந்து கைகழுவிவிட்டு, தனியார்மயக் கொள்ளைக்கு அனுமதித்ததன் விளைவாக கும்பகோணத்தில் 93 பள்ளிக் குழந்தைகள் தீயில் வெந்து கருகி மடிந்து போயுள்ளனர். தமிழகத்தையே உலுக்கிய இந்தக் கோரச் சம்பவம், எதிர்பாராத விபத்தல்ல; ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு நிகரான கொடுமை. தனியார்மயமாக்கலின் கோரப் பலியை மூடிமறைத்து விட்டு, அரசியலற்ற மனிதாபிமானத்தில் சர்வகட்சித் தலைவர்கள் முதலைக் கண்ணீர் வடித்துவரும் வேளையில், தனியார் கல்விக் கொள்ளையின் கோர விளைவுதான் இக்கொடுமை என்ற உண்மையை உணர்த்தி புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியும் அதன் தோழமை அமைப்புகளும் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன.

**விழுப்புரத்தில்,** 19.4.04 அன்று மாலை வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் பு.மா.இ.மு. கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. கும்பகோணம் கோரச் சம்பவத்தையொட்டிய புகைப்படங்களை தட்டிகளில் ஒட்டி முழக்கப் பதாகைகளுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், "ஜெயலலிதாவும் கருணாநிதியும் அறிக்கை விடுவதில் எதிரணி; கல்வியைத் தனியார்மயமாக்குவதில் ஓரணி! பகற்கொள்ளையடிக்கும் தனியார் பள்ளிகளின் உரிமங்களை ரத்து செய்! சொத்துக்களைப் பறிமுதல் செய்! அனைத்து தனியார் பள்ளிகளையும் அரசுடமையாக்கு! குழந்தைகளின் கொடூரக் கொலைக்குக் காரணமான பள்ளி உரிமையாளர் பழனிச்சாமி கும்பல் மீது கொலை வழக்குப் பதிவு செய்து தண்டனையளி! அவனுக்கு உடந்தையாகச் செயல்பட்ட கல்வி அதிகாரிகளைக் கைது செய்து, பணி நீக்கம் செய்!" - ஆகிய முழக்கங்களை தோழர்கள் விண்ணதிர முழங்கினர்.

தோழர் செல்வக்குமார் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், மனித உரிமைப் பாதுகாப்புக் கவுன்சிலின் கடலூர் மாவட்டச் செயலாளர் தோழர் ராஜு, விவசாயிகள் விடுதலை முன்னணியின் திருவெண்ணெய்நல்லூர் வட்டச் செயலாளர் தோழர் அம்பேத்கர் ஆகியோர், தனியார்மயத்தின் கோரத்தை விளக்கியும் ஒட்டுக் கட்சிகளின் மனிதாபிமான நாடகத்தை அம்பலப்படுத்தியும் சிறப்புரையாற்றினர்.

**சீர்காழியில்,** 20.7.04 அன்று மாலை பழைய பேருந்து நிலையம் அருகில் வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின. "கல்வி தனியார்மயமாக்கலின் கோரப் பலி! குடந்தை பள்ளியில் மழலைகள் பலி! தமிழக அரசின் நாசகார கல்விக் கொள்கையை முறியடிப்போம்!" என்று முழங்கியபடியே தோழர் இளங்கோ தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் ஸ்டாலின், இரவி, அம்பிகாபதி ஆகியோர் தனியாமயமாக்கலால் தொழிலாளர்களும், நெசவாளர்களும் பாதிக்கப்பட்டதோடு, இன்று பச்சிளம் குழந்தைகளும் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளதை விளக்கி, தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிராகப் போராடி வீழ்த்துவதே, குடந்தையில் கருகிய மொட்டுக்களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும் என்று தமது சிறப்புரையில் குறிப்பிட்டனர்.

**சென்னையில்,** 22.6.04 அன்று மாலை மெமோரியல் ஹால் அருகே பு.மா.இ.மு. கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இலவசக் கல்வியை அடிப்படை உரிமையாக்கவும், நர்சரி பள்ளிகளை இழுத்துமூடி தனியார் பள்ளி முதலைகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யக் கோரியும், பள்ளி தாளாளர் புலவர் பழனிச்சாமியையும் தொடக்கப்பள்ளி கல்வி இயக்குனர் கண்ணனையும் தூக்கிலிடக் கோரியும் தோழர்கள் எழுப்பிய முழக்கங்கள், கும்பகோணம் தீயின் புகைமூட்டத்தில் மறைக்கப்பட்ட உண்மையை மக்களிடம் வெளிச்சம் போட்டுக் காட்டியது. சாராயக்கடை அதிபர்களிடம் கல்வி வழங்கும் பொறுப்பு; பட்டதாரிகளுக்கு சாராயக் கடையில் வேலை என்ற அவல நிலைமைக்குக் காரணம் தனியார்மயம்தான் என்பதை தலைமையேற்ற தோழர் புவனும் சிறப்புரையாற்றிய தோழர் கணேசனும் விளக்கினர்.

**திருச்சியில்,** பு.மா.இ.மு. சார்பாக, கும்பகோணம் பள்ளியில் தீயில் கருகிய மழலைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் காட்டூர் உருமு தனலெட்சுமி கல்லூரி முன்பு மாணவ - மாணவிகள் பங்கேற்ற வாயிற் கூட்டம் 20.7.04 அன்று நடைபெற்றது. அக்கல்லூரி மாணவர் ரமேஷ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பு.மா.இ.மு. மாவட்டச் செயலர் தோழர் தண்டபாணி சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில், "இக்கொடிய சம்பவம் எதிர்பாராத விபத்து அல்ல; கல்விக் கொள்ளையர்களும் ஒட்டுக் கட்சி ஆட்சியாளர்களும் நடத்திய படுகொலை. இது தனியார் கல்விக் கொள்ளையின் கோரவிளைவு. மாணவர்களாகிய நாம் அஞ்சலி செலுத்துவதோடு நின்றுவிடாமல், மாணவர்களின் - உழைக்கும் மக்களின் எதிர்கால வாழ்வையே பறித்துவரும் தனியார்மயக் கொள்ளைக்கு எதிராகப் போராட வேண்டும்" என்று விளக்கினார். கூட்ட இறுதியில் தீயில் கருகி மாண்ட குழந்தைகளின் நினைவை நெஞ்சிலேந்தி மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர்.




தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் 20.7.04 அன்று வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக, வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள்



படிப்பகம்

www.padippakam.com

இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின. ஆர்ப்பாட்டத்துக்கு முன் பேருந்து நிலையம், வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பாக முழக்கங்களுடன் பிரசுரம் விநியோகித்தபடியே தோழர்களும் பொதுமக்களும் ஊர்வலமாகத் திரண்டனர். பு.மா.இ.மு. மாவட்டச் செயலர் தோழர் சுரேஷ் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் வி.வி.மு. தோழர் அருண் ஓட்டுக் கட்சி தலைவர்கள் தங்கள் குழந்தைகளை இத்தகைய பள்ளிகளில் சேர்ப்பார்களா? உழைக்கும் மக்களின் குழந்தைகளை கிள்ளுக் கீரையாக மதிக்கும் இவர்கள், இப்போது ஒப்பாரி நாடகம் நடத்துவது ஏன்? என்று கேட்டு தனியார் கல்விக் கொள்ளையின் கோரத்தை விளக்கி சிறப்புரையாற்றினர். தனியார் கல்விக் கொள்ளைக்கு எதிரான முழக்கங்களும், தோழர்கள் உணர்ச்சியோடு தனியார்மயத்துக்கு எதிராகப் பாடிய பாடல்களும் பகுதிவாழ் மக்களிடம் போராட்ட உணர்வூட்டியது.




**தஞ்சையில்,** ''தனியார் கல்விக் கொள்ளைக்குத் தீவைப் போம்!'' என்ற முழக்கத்துடன் தீயில் கருகிய தளிர்களுக்கு அஞ்சலி செலுத்தி பு.மா.இ.மு. மாவட்டச்செயலர் தோழர் பரமானந்தம் தலைமையில் ரயில் நிலையம் அருகே 19.7.04 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தஞ்சை மற்றும் திருச்சி மாவட்ட பு.மா.இ.மு. கிளைகள் இணைந்து 22.7.04 அன்று தஞ்சை சிவகங்கை பூங்காவிலிருந்து பனகல் கட்டிடம் வரை பேரணியும் அங்கு ஆர்ப்பாட்டமும் நடத்தின. இவ்விரு ஆர்ப்பாட்டங்களிலும் ம.க.இ.க. தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். கீற்றுக் கொட்டகைதான் தீவிபத்துக்குக் காரணம் என்று ஓட்டுக் கட்சிகள் உண்மைக் காரணத்தை மூடி மறைக்க முயற்சித்த வேளையில், பு.மா.இ.மு.வின் இக்கண்டன ஆர்ப்பாட்டங்கள் மக்களைத் தெளிவடையச் செய்து, தனியார்மயக் கொள்ளைக்கு எதிராகப் போராட அறைகூவுவதாக அமைந்தன.

தனியார் கல்விக் கொள்ளையால் தீயில் கருகிப் போன குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தி, 24.7.04 அன்று **குடந்தையில்** மகாமக மேல்கரையில் தஞ்சை - குடந்தை பு.மா.இ.மு. கிளைகள் இணைந்து கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தின. தோழர் சம்புகன் தலைமையில் நடந்த இப்பொதுக் கூட்டத்தில் தோழர் பரமானந்தம், தோழர் விவேகானந்தன் (நீலப்புலிகள் இயக்கம்) தோழர் காளியப்பன் (ம.க.இ.க.) ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியாக, ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய போர்க்குணமிக்க புரட்சிகர கலைநிகழ்ச்சியானது, தனியார்மயத்துக்கு எதிராகப் போராடுவதொன்றே தீயில் கருகி மாண்ட குழந்தைகளுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும் என்பதை உணர்த்தியது.

**கோவையில்,** குடந்தை கோரக் கொலைக்குக் காரணமான தனியார் கல்விக் கொள்ளையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த போலீசிடம் அனுமதி கோரிய போதிலும், எந்தவொரு கூட்டம் - ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்துக்கும் அனுமதி கிடையாது என்று போலீசு மறுத்துவிட்டது. இருப்பினும், போலீசு தடையை மீறி 27.7.04 அன்ற மாலை கணபதி 3-ஆம் எண் பேருந்து நிலையம் அருகே பு.மா.இ.மு. கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. திரளாக பெண்களும், பள்ளிக் குழந்தைகளும் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ம.க.இ.க., பு.ஜ.தொ.மு. ஆகிய தோழமை அமைப்புகளின் முன்னணியாளர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர். தடையை மீறி நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தை கண்டு ஆத்திரமடைந்த போலீசு, அனைவரையும் கைது செய்து நீண்ட இழுத்தடிப்புக்குப் பிறகு விடுதலை செய்தது. தடையை மீறி போர்க்குணத்துடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், உழைக்கும் மக்களின் போராட்ட உணர்வைத் தூண்டுவதாக அமைந்து, அவர்களின் பேராதரவைப் பெற்றது.




ஓட்டுக் கட்சிகளும் மாணவர் - இளைஞர் அமைப்புகளும் மனிதாபிமான விளம்பரத்தில் போட்டி போட்டுக் கொண்டிருந்த வேளையில், பு.மா.இ.மு.வும் அதன் தோழமை அமைப்புகளும் நடத்திய இக்கண்டன ஆர்ப்பாட்டங்கள், இக்கோரக் கொலைக்கான காரணத்தை உணர்த்தி, தனியார் மயத்துக்கு எதிராகப் போராட மக்களை அறைகூவுவதாக அமைந்தன. ●


படிப்பகம்

www.padippakam.com



# விவசாயிகள் தற்கொலை: தாராளமயத்தின் கோரத்தாண்டவம்

நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்பாக, ஆந்திராவில் தெலுங்கு தேசமும், கர்நாடகாவில் காங்கிரசும் - வெவ்வேறு கட்சிகள் ஆட்சியில் இருந்தாலும், அக்கட்சிகள் அம்மாநிலங்களில் நடைமுறைப்படுத்திய பொருளாதாரக் கொள்கை ஒன்றுதான் - மாநில 'வளர்ச்சி'க்காகப் பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்குவது; கடன் கொடுத்த அந்நிதி நிறுவனங்கள் விதிக்கும் கட்டளைகளை இம்மி பிசகாமல் நடைமுறைப்படுத்துவது - இதைத் தவிர வேறு எந்த பொருளாதாரத் திட்டமும் தெலுங்கு தேசத்திடமும், காங்கிரசிடமும் இருந்தது கிடையாது. கர்நாடக முதல்வராக இருந்த கிருஷ்ணாவிற்கும்; ஆந்திராவின் முதல்வராக இருந்த சந்திரபாபு நாயுடுவிற்கும் இடையே உலக வங்கியிடம் நல்ல பெயர் எடுப்பதில் மறைமுகமான போட்டியே நடந்தது.

சந்திரபாபு நாயுடுவின் ஆட்சியில் ஆந்திர மாநிலத் தலைநகரான ஹைதராபாத், ''சைபராபாத்'' எனச் செல்லமாக அழைக்கப்பட்டதைப் போல, கிருஷ்ணாவின் ஆட்சியில் கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூர், தகவல் தொழில்நுட்ப நகரம் என்றும், ''உலகமய'' நகரம் என்றும் அழைக்கப்பட்டது. பெங்களூரின் இந்த உலகமய வளர்ச்சியின் பின்னே, கடந்த ஒரே ஆண்டில் 650-க்கும் மேற்பட்ட கர்நாடக விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டது பூசி மெழுகப்பட்டது.

ஆந்திராவில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளுக்காக முதலைக் கண்ணீர் விட்டு ஓட்டுப் பொறுக்கிய காங்கிரசு, கர்நாடகாவில் தனது ஆட்சியில் நடந்த விவசாயிகளின் தற்கொலைகளை மிகக் கேவலமாக உதாசீனப்படுத்தியது.

''விவசாயிகள் குடிகாரர்கள்; அதனால்தான் அவர்கள் மீள முடியாத கடனாளியாகித் தற்கொலை செய்து கொள்கிறார்கள்'' என்பதுதான் கர்நாடக விவசாயிகளின் கடன் சுமை பற்றியும்; விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளைப் பற்றியும் கிருஷ்ணா தலைமையில் நடந்த காங்கிரசு ஆட்சியின் அதிகார பூர்வ கருத்து. ஆனால், தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் பிணங்களைப் பிரேதப் பரிசோதனைக்காக மருத்துவர்கள் அறுத்த பொழுது, அவர்களின் வயிற்றில் சீமை சாராயம் இருக்கவில்லை; மாறாக, பூச்சி மருந்துதான் இருந்தது.

●●●

காங்கிரசு அரசாங்கம் மூன்றாண்டுகளுக்கு முன்பு ''மின் கட்டண உயர்வு'' என்ற பெயரில் விவசாயிகளுக்குக் கொடுத்த அதிர்ச்சிதான், அவர்களைக் கடனாளியாக்கி, தற்கொலைக்கும் தள்ளிவிட்டது. இந்தத் தாராளமயத் தாக்குதலை மூடி மறைப்பதற்காகவே, காங்கிரசு கும்பல் வறட்சியை ஊதிப் பெருக்கியது.

''கர்நாடக மாநில பொருளாதார மறுசீரமைப்புக் கடன்'' என்ற பெயரில் உலக வங்கியிடமிருந்து 720 கோடி ரூபாயை, கர்நாடகா மாநில அரசு மூன்றாண்டுகளுக்கு முன்பு கடனாகப் பெற்றது. உலக வங்கி இக்கடனைக் கொடுப்பதற்கு விதித்த மிக முக்கியமான நிபந்தனை, ''மின் துறையைத் தனியார்மயமாக்க வேண்டும்'' என்பதுதான். இக்கடன் தொடர்பாக உலக வங்கி கர்நாடக மாநில அரசுக்கு மே 25, 2001 அன்று அளித்த அறிக்கையில், ''மின்துறையை சீரமைப்பதன் நோக்கமே, மாநில அரசு மின் உற்பத்தி மற்றும் மின் விநியோகத்தை ஒழுங்குபடுத்தும் பொறுப்புகளில் இருந்து விடுபட வேண்டும் என்பதுதான்'' என வெளிப்படையாகவே கட்டளையிட்டது.

இக்கட்டளைக்கு ஏற்ப, கர்நாடக மாநில காங்கிரசு அமைச்சரவை 2001 டிசம்பரில் மின்துறையைத் தனியார்மயமாக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததோடு, தனியார்மயமாக்கலை மேற்பார்வையிடுவதற்காக கர்நாடகா மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தையும் உருவாக்கியது. 2002-ஆம் ஆண்டு இறுதிக்குள் கர்நாடகா மாநிலமெங்கும் மின் விநியோகத்தைத் தனியார் முதலாளிகளிடம் ஒப்படைப்பதற்குச் சம்மதித்தது.

உலக வங்கியின் கட்டளைக்கு ஏற்ப, விவசாயத்திற்கும், குடிசை வீடுகளுக்கும் வழங்கப்பட்டு வந்த இலவச

**தகவல் - தொழில்நுட்ப புரட்சிக்குப் பேர்போன பெங்களூர் அருகிலேயே (மலூர் கிராமம்) கடன் - வறுமையின் காரணமாக ஒரு விவசாயியின் குடும்பமே தற்கொலை செய்து கொண்ட அவலம்.**





படிப்பகம்

www.padippakam.com

மின்சாரம் நிறுத்தப்பட்டது. விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின் கட்டணம், ஒரு குதிரை சக்திக்கு ரூ. 540/- என நிர்ணயிக்கப்பட்டது. கிணற்றுப் பாசனத்தை மட்டுமே நம்பி பயிர் செய்யும் சாதாரண சிறு விவசாயிகள் கூட வருடமொன்றுக்கு மின் கட்டணமாக எண்பதாயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்ற பயங்கரமான பீதியூட்டும் நிலைமை விவசாயிகளுக்கு எதிராக உருவாக்கப்பட்டது.

மின் கட்டணத்தைக் கட்டத் தவறும் விவசாயிகள் மீது ஐம்பதாயிரம் ரூபாய் கூடுதல் அபராதமும், சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என விவசாயிகள் அச்சுறுத்தப்பட்டனர். மின் கட்டணத்தை விவசாயிகளிடமிருந்து மிரட்டி வசூலிப்பதற்காக ''புலிகேசி படை'' என்ற குண்டர் படை அமைக்கப்பட்டது. ஹூப்ளி பகுதியில் பல விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதற்கு இந்த மின் கட்டண உயர்வும்; அதை வசூலிப்பதற்கு காங்கிரசு அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்ட ரவுடித்தனமும் காரணமாக அமைந்தன.

அபராதம், சிறை தண்டனை, தனியார் குண்டர்படையின் மிரட்டல் எனப் பீதியூட்டப்பட்ட விவசாயிகள் கந்து வட்டிக்கு கடன் வாங்கியாவது மின் கட்டணத்தைக் கட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். தாராளமயத்தின் பின் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்கள், விவசாயத்திற்குக் கடன் கொடுப்பதை ஒதுக்கித் தள்ளியதன் மூலம் விவசாயிகளைக் கந்துவட்டிக் கும்பலிடம் சிக்க வைத்தது. கர்நாடகா மாநிலத்தில் மட்டும் மார்ச் 2000-க்கும் மார்ச் 2002-க்கும் இடைபட்ட இரண்டே ஆண்டுகளில், கிராமப்புறங்களில் இயங்கி வந்த அரசு வங்கிகளின் எண்ணிக்கை 2,250-லிருந்து 2,201 ஆக குறைக்கப்பட்டன. இதன் மூலம் கிராமப்புறங்களில் பழைய கால ஒட்டுண்ணி லேவாதேவி தொழிலுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது.

கர்நாடகா மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சர் வீரப்ப மொய்லி, ''விவசாய கடன்'' எனும் தலைப்பில் தயாரித்துள்ள அறிக்கையில், ''தற்கொலை செய்து கொண்ட சிறு விவசாயிகளுள் பெரும்பாலோர் ரூ. 70,000 வரை கந்து வட்டிக்குக் கடன் வாங்கியுள்ளனர். அதேசமயம், இந்த விவசாயிகள் அரசு வங்கிகளிடமிருந்தும், கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும் பெற்ற கடன் மிகவும் அற்பமானதுதான்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.





பாக்கு விவசாயம் சரிந்து விழுந்ததால் கடனாளியாகிப் போன லோலாக்சிபட்-உம் அவரது இளைய மகனும் (மேல்படம்); பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்ட சிறுமி ரேகா.

அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்க உலக கந்துவட்டிக்காரன் உலக வங்கி; விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க உள்ளூர் கந்துவட்டிக் கும்பல். உலக வங்கி, ''மின்துறையைத் தனியாருக்குக் கொடு; தண்ணீரைத் தனியார்மயமாக்கு'' எனக் கட்டளை போட்டு பொதுச் சொத்துக்களை வேட்டையாடுகிறது; உளளூர் கந்துவட்டி கும்பலோ விவசாயிகளின் அற்ப உடைமைகளைக் கொள்ளையடிக்கிறது. தனியார்மயம் - தாராளமயம் என்ற பொருளாதாரக் கொள்கையில், இந்தக் கொள்ளையைத் தவிர வேறென்ன இருக்கிறது?

**அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்க சர்வதேச கந்து வட்டிக்காரன் உலக வங்கி; விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க உள்ளூர் கந்து வட்டி கும்பல். உலக வங்கி அரசு சொத்துக்களை முழுங்குகிறது. உள்ளூர் கந்துவட்டிக் கும்பல் விவசாயிகளின் சொத்துக்களை வளைத்துக் கொள்கிறது. இந்தப் பகற்கொள்ளையின் மறுபெயர்தான் தனியார்மயம்-தாராளமயம்.**

●●●

கந்து வட்டிக் கடனில் மூழ்கி தத்தளிக்கும் விவசாயிகளுக்கு, தாராளமயத்தின் ஆதரவாளர்கள் நோகாமல் கொடுக்கும் ஆலோசனை, ''உணவுப் பயிர் விவசாயத்தைக் கைவிடுங்கள்; பணப்பயிர் விவசாயத்திற்கு மாறுங்கள்'' என்பதுதான். இந்த அறிவுரையை நம்பி, பணப்பயிர் விவசாயத்திற்கு மாறிய விவசாயிகளின் நிலைமை அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கதையாகி விட்டது.

கர்நாடகா மாநிலத்தில் பல ஆயிரக் கணக்கான சிறு விவசாயிகள் உணவுப் பயிர்களைப் பயிரிடுவதைக் கைவிட்டு, பாக்கு விவசாயத்திற்கு மாறியதால், அம்மாநிலத்தில் பாக்கு சாகுபடியாகும் நிலத்தின் மொத்த பரப்பளவு கடந்த பத்தே ஆண்டுகளில், ஆறு மடங்கு அதிகரித்தது. 1999-க்கு முன்பு வரை விவசாயிகளுக்கு ஓரளவு நல்ல வருமானம் தந்து கொண்டிருந்த பாக்கு விவசாயம் அதன் பிறகு சரிந்து கீழே விழுந்து விட்டது. பஞ்சத்திற்குப் பாக்கு விவசாயிகளாக மாறியவர்கள் மட்டுமல்ல, பரம்பரை பரம்பரையாக பாக்கு விவசாயம் செய்து வந்த விவசாயிகளும் கூட இன்று போண்டியாகிப் போய் நிற்கிறார்கள்.

✦ உத்தர் கனரா மாவட்டத்திலுள்ள உஞ்சல்லி கிராமத்தைச் சேர்ந்த சதானந் பட் என்ற பாக்கு விவசாயி 1,25,000 ரூபாய் கடனை அடைக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார். கிட்டத்தட்ட 500 ஆண்டுகளாக பாக்கு விவசாயத்தில் ஈடுபட்டு வரும் இவரது குடும்பம், இன்று வெறும் அரிசிக் கஞ்சியைக் குடித்து விட்டு வாழ்க்கையை ஓட்டும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

✦ ஹூக்கிகட்டே கிராமத்தைச் சேர்ந்த மஞ்சுநாத் ராமச்சந்திர பட், ''கடன் தொல்லை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறேன்'' என எழுதி வைத்துவிட்டு உயிரை மாய்த்துக் கொண்டார்.

✦ கொடேமானே கிராமத்தில் ஏறத்தாழ 20 குடும்பங்கள் பாக்கு விவசாயம் செய்து வருகின்றன. பாக்கு விலை வீழ்ந்ததால், இந்த 20 குடும்பங்களின் மொத்த கடன் ஒரு கோடி ரூபாயைத் தொட்டுவிட்டது. அடுத்தவேளை சோற்றுக்குக் கூட, மளிகைக் கடையில் கடன்


படிப்பகம்

www.padippakam.com

வாங்க வேண்டிய அவல நிலையில் இந்த இருபது குடும்பங்களும் காலத்தை ஓட்டுகின்றன.

"கூட்டுறவு சங்கங்கள் பாக்கு விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதை நிறுத்தி விட்டன. வீடு, நிலம், நகைகள் எல்லாம் வட்டிக் கடைகளில் அடமானத்தில் கிடக்கின்றன. பாக்கு விவசாயிகளின் வீட்டில் இப்பொழுதெல்லாம் நல்ல காரியங்கள் நடப்பதே அரிதாகி விட்டது. பெண் குழந்தைகளின் படிப்பு சுத்தமாக நிறுத்தப்பட்டு விட்டது. வயதுக்கு வந்த பெண்களின் திருமணம் கடன் சுமையால் தள்ளிப் போடப்படுகிறது. சகித்துக் கொள்ளவே முடியாத நிலைமை எங்களைத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுகிறது" எனப் பாக்கு விவசாயிகளின் அவல வாழ்க்கையைக் கூறிப் புலம்புகிறார் ஈசுவரப்பா என்ற விவசாயி. 25 ஏக்கரில் பாக்கு விவசாயம் செய்து வரும் ஈசுவரப்பாவின் கடன் சுமை இன்று தலைக்கு மேலே போய் விட்டது.



கேரளாவில் நார்கயிறு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள 4 இலட்சம் தொழிலாளர்கள், காங்கிரசின் ஆட்சியில் முன்னெப்போதும் கேட்டிராத வறுமையில் சிக்கிக் கொண்டனர்: தாராளமயத்தின் பின்விளைவு.

1999-ஆம் ஆண்டு பா.ஜ.க., தலைமையில் இருந்த மைய அரசு விவசாய விளைபொருட்களை இறக்குமதி செய்வதற்கு இருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கியது. இதையடுத்து, தாய்லாந்து, மலேசியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் இருந்து மிகக் குறைந்த விலையில் பாக்கு இந்தியாவிற்கு இறக்குமதியாகத் தொடங்கியது. இந்தக் கழுத்தறுப்பு போட்டியால் இந்தியப் பாக்கின் விலையும் சரிந்தது. உற்பத்திச் செலவு குறையாமல், பாக்கின் விலை மட்டும் சரிந்து வீழ்ந்ததால், பாக்கு விவசாயிகள் மீள முடியாத கடனில் மாட்டிக் கொண்டார்கள். இந்த தாராள இறக்குமதி, கர்நாடகாவில் மட்டுமல்ல, இந்தியாவில் பாக்கு விவசாயத்தை நம்பி வாழும் 60 இலட்சம் விவசாயிகளின் வாழ்க்கையை நான்கே ஆண்டுகளில் நிலைகுலைய வைத்துவிட்டது.

தாராள இறக்குமதியால் பாதிக்கப்படாத பணப் பயிர் விவசாயமே இன்று இந்தியாவில் கிடையாது. கேரளாவில் மட்டும் ரப்பர், தேயிலை, காபி, ஏலக்காய் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 14 இலட்சம் விவசாயக் குடும்பங்கள், தாராள இறக்குமதியால் விவசாயத்தை விட்டு வெளியேற வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரண்டு மாதம் முன்பாக கேரளாவில் 30 விவசாயிகள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டனர். ஆந்திர, கர்நாடக விவசாயிகளை எது தற்கொலைக்குத் தள்ளிவிட்டதோ, அதே காரணங்கள்தான் 30 கேரள விவசாயிகளின் உயிரையும் காவு கொண்டது. இந்தத் தற்கொலை சாவுகளைவிட, கேரளாவிற்கு 50,000 கோடி ரூபாய் அந்நிய முதலீட்டைக் கொண்டு வருவது எப்படி என்பதுதான் கேரள முதல்வர் அந்தோணியின் கவலை.

இம்முதலீட்டைப் பெறுவதற்காக, உலக வங்கியின் கட்டளைப்படி அந்தோணி, மின்சாரக் கட்டணத்தையும், தண்ணீர் வரியையும் உயர்த்தினார்; அரசாங்க வேலைக்கு புதிதாக ஆளெடுப்பதைத் தடை செய்தார்; மீனவர்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்கப்படும் மண்ணெண்ணெயின் அளவைக் குறைத்தார்; கேரளாவின் கடல் பகுதியில் அந்நியக் கப்பல்கள் மீன் பிடிக்க அனுமதித்தார்; கேரள அரசுக்குச் சொந்தமான 59 பொதுத்துறை நிறுவனங்களுள் 56 நிறுவனங்கள் நட்டத்தில் நடப்பதாக அறிவித்து, அவற்றை மூடுவதற்குத் தயார் செய்தார்; கேரளாவின் மின்துறையையும், போக்குவரத்துத் துறையையும் தனியாருக்கு விற்கத் திட்டம் போட்டார். இதற்கும் மேலாக, கேரளாவின் வளமான ஆறுகளையும், கடற்கரை மணலையும் கூட பகுதி பகுதியாகத் தனியாருக்கு விற்க ஒப்பந்தம் போட்டார்.

இதன் விளைவாக, விவசாயத்தை நம்பியிருக்கும் 1 கோடி விவசாயிகளின் வாழ்க்கையும்; கயிறு, ஓடு தயாரித்தல், மீன் பிடித்தல் ஆகிய பாரம்பரிய தொழில்களை நம்பியிருக்கும் 40 இலட்சம் தொழிலாளர்களின் வாழ்க்கையும் சூறாவளிக்குள் சிக்கிக் கொண்ட சிறு படகு போல ஆனது. இந்தியாவிலேயே, வேலை இல்லாத பட்டாளம் நிறைந்த முதல் மாநிலம் என்ற பட்டமும் அந்தோணி அரசின் தயவால் கேரளாவிற்குக் கிடைத்தது.

ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மட்டு மல்ல, இந்தியாவில் எந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டாலும், அம்மாநிலத்தில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், உலக வங்கியின் கட்டளைகள் தான், பொருளாதாரக் கொள்கையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. தேர்தலில் ஆளுங்கட்சி தோற்று, எதிர்க்கட்சி வெற்றி பெற்றால் கூட, தனியார்மயம் - தாராளமயத்தை நடைமுறைப்படுத்துவதில் எந்தவிதமான மாற்றமும் வந்து விடாது. இதற்கு உதாரணமாக, மத்தியப் பிரதேச மாநிலத்தில் காங்கிரசு ஆட்சியிலும், சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசை வீழ்த்தி ஆட்சியைப் பிடித்த பா.ஜ.க. ஆட்சியிலும் நடந்து வருவதை அடுத்து பார்ப்போம்.

(தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

## திருச்சி ''பெல்'' நிர்வாகப் பள்ளி தீ விபத்து:

# அதிகாரிகளைப் பணிய வைத்த பெற்றோர்களின் போராட்டம்

கும்பகோணத்தில் கோரத் தீ-க்கு 90-க்கும் மேற்பட்ட இளம் தளிர்களைப் பலிகொடுத்த பிறகுதான் தமிழ்நாட்டின் 70 சதவீதமான பள்ளிகள் அப்படிப்பட்ட அபாயகரமான நிலையில் உள்ளன என்கிற கசப்பான உண்மை எல்லோருக்கும் உரைத்தது. ஆனால், அதற்கு முதல் நாள் அதாவது ஜூலை 15-ஆம் தேதி திருச்சி - பாரத மிகுமின் தொழிற்சாலை (பி.எச்.இ.எல்) வளாகத்தில் உள்ள பாய்லர் பிளாண்ட் நர்சரி மற்றும் பிரைமரிப் பள்ளியின் கூரைக் கொட்டகை தீப்பற்றி எரிந்து நாசமாகியது.

400 மாணவர்கள், தற்செயலாய் உயிர் தப்பினர். பொதுமக்களும் 'ஆட்டோ - வேன்' ஓட்டுநர்களும் பெற்றோர்களும் கடுமையாகப் போராடி தீயை அணைத்து குழந்தைகளைக் காப்பாற்றினர். இல்லையெனில் குறைந்தது 100 குழந்தைகள் பலியாகியிருப்பர். அவர்களின் புத்தகப் பைகள் எரிந்து சாம்பலாயின. இச்செய்தி, ஊடகங்களால் மூடி மறைக்கப்பட்டன. இதையே ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டிருந்தால், குடந்தையில் 93 குழந்தைகளை இழந்திருக்க மாட்டோம்.

ஆனால், குடந்தை சம்பவத்துக்குப் பிறகும், திருச்சி பெல் பள்ளியில் மாணவர்களின் பாதுகாப்புக் கோரி பெற்றோர்கள் திரண்ட போது, ஆலை நிர்வாகம் அதைத் தட்டிக் கழித்தது. ஆலைத் தொழிலாளர் பிள்ளைகளுக்கான பள்ளியில், ஏதோ இலவசமாக ''வெளியார் பிள்ளைகளை சேர்த்துக் கொண்டுள்ளோம்; வேண்டுமானால் வேறு பள்ளிக்குப் போய்விடுங்கள்'' என்று திமிராகப் பேசி விரட்டியது பெல் நிர்வாகம்.

அப்பகுதி புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி கடந்த 21-ந் தேதி பெல் நிர்வாகத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டு பெற்றோர்களைத் திரட்டியது. ஆனால் 1000-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு, ஆர்ப்பாட்டத்தை சாலை மறியலாக மாற்றி உறுதியுடன் போராடினர். திருச்சி - தஞ்சை சாலையில் மணிக்கணக்கில் போக்குவரத்து முடங்கிப் போகவே, அங்கு வந்த போலீசு, பெல் நிர்வாகத்தின் தூண்டுதலால் தடியடி நடத்தப் போவதாக மிரட்டியது. அஞ்சாத மக்கள் உறுதி காட்டியபிறகு, பெல் நிர்வாகம் திமிர்ப் பேச்சுக்கு மன்னிப்பு கோரியதோடு, அடுத்த நாள் மக்கள் கோரிக்கை மீது பேச்சு வார்த்தை நடத்தவும் ஒப்புக் கொண்டது.

மறுநாள், திருவரம்பூர் ஒன்றிய அலுவலகத்தில், வட்டாட்சியர், பெல் நிர்வாகம் மற்றும் போலீசு அதிகாரி முன்னிலையில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி மற்றும் பெற்றோர் - பொதுமக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்ட பேச்சு வார்த்தை நடந்தது. பெல் நிறுவனத்துக்கு குறைந்த விலையில் நிலம் வழங்கி, நிறுவன வளர்ச்சிக்கு மறைமுகமாகப் பொதுமக்களும் உதவி இருக்கின்றனர்; அந்த வட்டார மக்களின் நலன்களுக்கு உதவ வேண்டியதில் ஆலை நிர்வாகத்துக்குள்ள பொறுப்பு, தட்டிக் கழிக்க முடியாதது என்று கூறி பொதுமக்களும் பெற்றோரும் சில கோரிக்கைகளை முன் வைத்தனர். பாதுகாப்பான பள்ளி; தனியே சமையலறை, அனைத்து மாணவருக்கும் ஒரே கல்விக் கட்டணம், எரிந்து போன பொருட்களுக்கு நட்ட ஈடு போன்ற அவர்களின் கோரிக்கைகளை ஏற்ற பெல் நிர்வாகம், அதற்காக தலைமை அலுவலகத்துக்கு பரிந்துரைக்க ஒப்புக் கொண்டது. இதற்கான ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டது.

— பு.ஜ. செய்தியாளர், திருச்சி

பு.மா.இ.மு. தலைமையில் எரிந்த பள்ளியின் மாணவர்களது பெற்றோர்கள் திரண்டு நடத்திய சாலை மறியல்.



### ''காசுள்ளவனுக்கே கல்வி!'' - புதிய மனுதர்மக் கல்விக் கொள்கையை எதிர்த்து பிரச்சார இயக்கம்

மறுகாலனியாதிக்கம், பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும், புதிய கல்விக் கொள்கையை எதிர்த்தும் தமிழகம் முழுவதும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் தாங்கள் செயல்படும் பகுதிகளில் கடந்த இரு மாதங்களாக பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றனர். துண்டுப் பிரசுரம், தட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள், பள்ளி - கல்லூரி வாயிற் கூட்டங்கள் மூலம் ஏழை மாணவர்களின் கல்வி உரிமையைப் பறிக்கும், கல்விக் கட்டண உயர்வு - கட்டாய நன்கொடையைத் திணிக்கும், ''காசுள்ளவனுக்கே கல்வி என்ற புதிய மனுதர்மக் கல்விக் கொள்கையை எதிர்த்தும் இலவசக் கல்வி எனும் அடிப்படை உரிமையை வலியுறுத்தியும் மாணவர்களிடமும் உழைக்கும் மக்களிடமும் வீச்சாகப் பிரச்சாரம் செய்து வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக, சிவகங்கை நகரில் முக்கிய வீதிகளில் தெருமுனைப் பிரச்சாரத்தோடு 30.6.04 அன்று பு.மா.இ.மு.வும் ம.க.இ.க.வும், இணைந்து, கல்விக் கொள்ளைக்கு எதிராக அரண்மனை வாசல் எதிரில் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. தோழர் முருகன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், தோழர்கள் அசுரன், எழில்மாறன், மக்கள்நேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் எழுப்பிய முழக்கங்களும், பிரச்சாரமும் மக்களிடம் வரவேற்பைப் பெற்று, போராட அறைகூவுவதாக அமைந்தன.

- பு.மா.இ.மு., சிவகங்கை


படிப்பகம்

# பிழைப்புவாதமே தலித்தியமாக... ஒட்டுண்ணிகளே தலைவர்களாக...

'சேரி'க்கு இழிவைத் தேடித்தரும் 'தலித்' தலைவர்கள் என்று தொல். திருமாவளவன் மற்றும் கிருஷ்ணசாமி ஆகியோரது தேர்தல் அரசியல் சந்தர்ப்பவாதங்களை அம்பலப்படுத்தி ''புதிய ஜனநாயகம்'' பத்திரிக்கை எழுதியிருந்தது. அதில் பு.ஜ. முன்வைத்திருந்த விமர்சனங்கள் எதற்குமே பதிலளிக்க வக்கற்ற தொல்.திருமா, பு.ஜ.வுக்கு எதிராக என்ன அவதூறு பரப்பினால் தனது ஆதாரவாளர்களிடையே நியாயப்படுத்த முடியுமோ அந்த வேலையைச் செய்துள்ளார். அதாவது பு.ஜ. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானது. சாதி இந்துக்களுக்கு ஆதரவானது, அம்பேத்கருக்கு எதிரானது என்பதைப் போல சித்தரித்திருக்கிறார்.

2004, ஏப்ரல் ''தாகம்'' பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் தொல். திருமா பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**''திட்டக்குடியில் 1995-இல் நடந்த ஒரு சாதி வெறியாட்டத்தில் அப்பட்டமாகச் சாதி வெறியர்களை ஆதரித்துப் புதிய ஜனநாயகத்திலே எழுதினார்கள். அப்போது நான் அதிர்ச்சியடைந்தேன்.**

**பொது இடத்திலே குடியிருக்கக் கூடாதென்று ஒடுக்கப்பட்டவர்கள் இருவரை அடித்துக் கொலை செய்திருக்கிறார்கள். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒடுக்கப்பட்டவர்களை அணிதிரட்டிப் போராடினேன். ஆனால் அந்த வன்முறை நிகழ்ந்ததற்குச் சிறுத்தைகள்தான் காரணம் எனவும், சாதி இந்துக்களின் நடவடிக்கைகள் சரியென்றும் அவர்கள் வாதாடி எழுதினார்கள். 'பாரத ரத்னா' என்று விருதைப் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கருக்கு வழங்கினார்கள். அந்த விருது வழங்குவதை நாங்கள் ஒன்றும் பெருமையாகக் கருதவில்லை. அதற்காக மத்திய அரசைப் பாராட்டவும் இல்லை. இந்திய அரசை விமர்சிக்க வேண்டிய அவர்கள், அம்பேத்கருக்குத் தகுதியில்லை என்று எழுதினார்கள்.''**

1995 திட்டக்குடி சம்பவம் பற்றியும், அம்பேத்கருக்கு 'பாரத் ரத்னா' விருது வழங்கியதைப் பற்றியும் அந்தந்தச் சமயங்களில் ''பு.ஜ.'' எழுதிய கட்டுரைகளை இங்கே அப்படியே, தனியே வெளியிடுகிறோம். இவற்றைப் படித்து வாசகர்களே முடிவு செய்து கொள்ளலாம்.

●●●

1995 மார்ச்-15, புதிய ஜனநாயகத்தில் வெளிவந்த செய்திக் கட்டுரையைப் படிக்கும் வாசகர்களே! தொல். திருமா கூறுவதைப் போல அவர் அதிர்ச்சியடையும் விதமாக ''அப்பட்டமாகச் சாதி வெறியர்களை ஆதரித்து'' புதிய ஜனநாயகம் எங்கே எழுதியிருக்கிறது? அந்தச் சம்பவத்தில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் செய்த சில தவறுகள் சுட்டிக் காட்டி விமர்சிக்கப்பட்டிருக்கின்றன. போலீசையும் ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அம்பலப்படுத்தித் தானே பு.ஜ. கட்டுரை உள்ளது! இப்படிச் செய்வது சாதிவெறியர்களை ஆதரிப்பதாகுமா? சாதி இந்துக்களின் நடவடிக்கைகள் சரியென்று வாதாடி எழுதியதாகுமா? தொல்.திருமாக்கள் செய்யும் தவறுகளை விமர்சித்து எழுதினாலே அது சாதி வெறியர்களை ஆதரித்ததாகுமா? அவர்களின் நடவடிக்கைகள் சரியென்று வாதாடுவதாகுமா? அப்படியென்றால் இவர்கள் தாங்கள் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட ''மகாத்மா''க்களாகத் தங்களைக் கருதுகிறார்களா?

இன்னொரு உண்மையையும் சொல்கிறோம். தொல்.திருமா குறிப்பிடும் ''பொய்க்கு'' மாறாக, இதே கட்டுரையில் விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பைப் பாராட்டித்தான் எழுதியிருக்கிறோம். ''பல ஆண்டுகளாக இச்சுற்று வட்டாரப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகப் பல கொடுமைகள் நிகழ்ந்தும் பிழைப்புவாத, துரோக பெயர்ப்பலகை கொண்ட தாழ்த்தப்பட்ட அமைப்புகளால் எந்தப் பயனும் இல்லை. இந்நிலையில் தலித் சிறுத்தைகள் அமைப்பு பிரச்சாரம், போராட்டம், சமரசமற்ற தீவிர நடவடிக்கைகள் மூலம் விரக்தியிலிருந்த மக்களிடையே நம்பிக்கையை வளர்த்தது. இதனால் 'தலித் சிறுத்தைகள்' அமைப்பின் தலைமையில் திரண்டு நேரடித் தாக்குதலில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடுபட்டனர்'' என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது.

இந்தச் செய்திக் கட்டுரை எழுதுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு, இதே சுற்றுவட்டாரத்தில் உள்ள அங்குச் செட்டிபாளையம், சிறுவாத்தூர் ஆகிய கிராமங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது போலீசு துணையுடன்

**ம.க.இ.க. - பு.மா.இ.மு. - வி.வி.மு. தோழர்கள் சிறீரங்கம் கோயிலின் கருவறைக்குள் நுழைந்த பொழுது, அம்பேத்கர் படத்தைக் கொண்டு, கருவறையில் இருந்த விக்கிரகத்தை மறைத்தனர். அம்பேத்கர் மீது இப்புரட்சிகர அமைப்புகள் கொண்டுள்ள மதிப்புக்கும், மரியாதைக்கும் இது ஒரு சான்று.**



www.padippakam.com

## திட்டக்குடி சாதிக் கலவரம்:

# தலித் சிறுத்தைகள் படிப்பனை பெறவேண்டும்

திட்டக்குடி - நாவலூர், ஆவட்டி கிராமங்களில் 17.1.95 அன்று ''தலித் சிறுத்தைகள்'' அமைப்பினர் தமது கொடியை ஏற்ற முயன்றனர். தாழ்த்தப்பட்டவர்களை வன்னிய மேல்சாதியினர் கொடி ஏற்ற விடாமல் தாக்கித் தடுத்தனர். இதைக் கேள்விப்பட்ட அருகிலுள்ள ஏனைய கிராமத்து சிறுத்தைகள், மேல் சாதி வெறியர்கள் மீது எதிர்த் தாக்குதல் தொடுத்தனர். இதில் மேல் சாதியினரின் வீடுகள் அனைத்தும் தாக்கப்பட்டன.

அண்மையில் அங்குச்செட்டிபாளையத்தில் தலித்துகளின் வீடுகள் மேல்சாதி வெறியர்களால் எரியூட்டப்பட்ட போது பதறாத போலீசு, நாவலூர் - ஆவட்டி கிராமங்களில் மேல் சாதியினர் தாக்கப்பட்டதும் பதறியடித்துக் கொண்டு வந்து உதவி செய்தது. பல ஆண்டுகளாக இச்சுற்று வட்டாரப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகப் பல கொடுகைள் நிகழ்ந்தும் பிழைப்புவாத, துரோக, பெயர்ப்பலகை கொண்ட பல தாழ்த்தப்பட்ட அமைப்புகளால் எந்தப் பயனும் இல்லை. இந்நிலையில் ''தலித் சிறுத்தைகள்'' அமைப்பு பிரச்சாரம், போராட்டம், சமரசமற்ற தீவிர நடவடிக்கைகள் மூலம் விரக்தியிலிருந்த மக்களிடையே நம்பிக்கையை வளர்த்தது. இதனால் ''தலித் சிறுத்தைகள்'' அமைப்பின் தலைமையில் திரண்டு நேரடி தாக்குதலில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடுபட்டனர்.

''தலித் சிறுத்தைகள்'' அமைப்பினர் 18.1.95 அன்று சாலை மறியலுக்கு அழைப்பு விடுத்தனர். சாலை மறியலுக்குப் பதிலாக கடைகளை அடைக்குமாறு கோரி வியாபாரிகளிடம் சென்றனர். இதற்கு மறுத்த தையல் கடைக்காரரிடம் ஏற்பட்ட மோதல் வலுத்துப் பெரிதாகியதும் போலீசு தலையிட்டு தடுத்தது. அன்று இரவே முதலியார் சாதியைச் சேர்ந்த ஏ.கே. கிருஷ்ணசாமி, இவர் மருமகன் பி.டி. ராஜன், சித்ரா சுப்ரமணியம், வன்னியரான கள்ளச் சாராய வியாபாரி காசி ஆகியோர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி போலீசுடன் சேர்ந்து தாழ்த்தப்பட்டர்களைத் தாக்கத் திட்டமிட்டனர்.

19.1.95 அன்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு இவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோரைத் திரட்டிக் கொண்டு சென்று ''தலித் சிறுத்தைகள்'' மீது நடவடிக்கை எடுக்கக் கோரினர். அப்பொழுது ஒரு கூட்டத்தினர் தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருப்பை நோக்கி முன்னேறவே தாழ்த்தப்பட்டவர்களும் பதில் தாக்குதலுக்குத் தயாராகியுள்ளனர். திட்டமிட்டபடி போலீசு தாழ்த்தப்பட்டவர்கள் மீது மட்டுமே தடியடி நடத்திக் கலைத்தது. இன்னொரு கூட்டத்தினர் பின்புறமாக தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்பை நெருங்கி விடவே தாழ்த்தப்பட்டவர்களில் ஒரு பிரிவினர் அதைத் தடுக்க முனைந்தனர். இதை எதிர்பார்த்து வேலி மறைவில் பதுங்கியிருந்த போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தியது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவரை மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்ற சண்முகம் என்பவரை சாதிவெறியர்கள் போலீசு முன்னிலையிலேயே அடித்தும் வெட்டியும் கொன்றனர். இச்சம்பவத்தில் கலந்து கொள்ளாத தொளார் கிராமத்தைச் சேர்ந்த அப்பாவியான ரமேஷ் என்ற தாழ்த்தப்பட்ட மாணவரை சாதிவெறிக் கும்பல் போலீசு பாதுகாப்போடு அடித்தே கொன்றது. ரமேஷைக் காப்பாற்ற முயன்ற தாழ்த்தப்பட்ட மக்களையும் துப்பாக்கி முனையில் தடுத்து விரட்டியது போலீசு. இச்சம்பவம் தொடர்பாக மேல்சாதி வெறியர்களையும், கொலையாளிகளையும் போலீசு கைது செய்யவில்லை. 1.2.95 அன்று தாழ்த்தப்பட்ட மக்கள் நடவடிக்கை கோரி சாலை மறியல் செய்த பின்னரும் கூட எவ்விதப் பயனுமில்லை. சம்பவத்தில் போலீசு தாக்கப்பட்டதாகக் கூறி அதைக் கண்டித்து மேல்சாதி வெறியர்கள் சுவரொட்டி போட்டு தமது கூட்டை நிரூபித்துக் கொண்டனர்.

''அடங்க மறுப்போம், அத்து மீறுவோம், திமிரி எழுவோம், திருப்பி அடிப்போம்'' என்ற ''தலித் சிறுத்தைகள்'' அமைப்பின் முழக்கம் வெறும் உணர்ச்சிப்பூர்வமானதாக மட்டுமே இருக்கிறது. அமைப்பின் கட்டுப்பாடு இல்லாமலும் வழிகாட்ட சரியான தலைமை ஆளில்லாமலும் போராட்டத்தையும் தாக்குதலையும் நடத்தித் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னலையே தேடிக் கொடுத்தார்கள். சம்பவத்தில் கைது செய்யப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களை பிணையில் எடுக்காமல் மாவட்ட - மாநிலத் தலைவர்கள் செயலிழந்து கிடந்தனர். தாழ்த்தப்பட்ட, மேல்சாதி உழைக்கும் மக்களுக்கு இடையே உள்ள முரண்பாட்டைச் சரியாக கையாண்டு ஐக்கியப்படுத்துவதற்குப் பதிலாக, நாவலூரில் மேல்சாதிக்காரர்களின் அனைத்து வீடுகளையும் தாக்கி முரண்பாட்டை வளர்த்தனர். இவர்கள் ஏற்றுக் கொண்ட சாதிய விடுதலைக்குக் கூட கொள்கை, திட்டம், வழிமுறை, அமைப்பு கட்டுப்பாடுகள் அவசியம் என்பதை இப்போராட்டம் அடுத்த கட்ட வளர்ச்சியில்லாமல் தேக்கநிலையை எட்டியதன் மூலம் உணர முடியும்.

மேல்சாதி வெறியர்களின் கோரமான தாக்குதல்களுக்கும் போலீசு, அரசியல்வாதிகள், ஆதிக்க சக்திகளின் கூட்டு பலத்தோடு தொடுக்கப்படுகிற தாக்குதல்களுக்கும், சதிகளுக்கும், அக்கிரமங்களுக்கும், புரட்சியாளர்களும் ஜனநாயகவாதிகளும் தான் தக்க பதிலடி கொடுக்க முடியும்.

*(புதிய ஜனநாயகம், 15 மார்ச்' 95)*

வன்னிய சாதியினர் நடத்திய கொலை வெறித் தாக்குதல்களைப் பற்றி எழுதினோம். இதிலும் பின்வருமாறு எழுதியுள்ளோம்.

''தாழ்த்தப்பட்ட அமைப்புகள் குறிப்பாக, 'தலித் சிறுத்தைகள்' அமைப்பினர் மக்களுக்குப் பொருளுதவி கிடைக்க ஏற்பாடு செய்ததோடு சாலை மறியல் போராட்டமும் நடத்திக் கண்டனம் தெரிவித்தனர். 28.11.94 அன்று கண்டனப் பேரணியும் பொதுக் கூட்டமும் நடத்தினர். ஓட்டுக் கட்சிகள் எதுவும் கண்டு கொள்ளவில்லை. மேல்சாதிக்காரர்களின் ஓட்டுப் போய்விடும் என்ற அச்சமே காரணம்.'' (95 ஜூன் 15 பு.ஜ. இதழ்.)

இங்கே எடுத்துக்காட்டியிருக்கும் இரண்டு மேற்கோள்களின் பொருள் என்ன? ''மொழிப் போர் மறவரான'' திருமா அவர்களின் கருத்துப்படி அப்பட்டமாகச் சாதிவெறியர்களை ஆதரித்து எழுதுவதாகிறதா? சாதி இந்துக்களின் நடவடிக்கைகள் சரியென்றும் வாதாடி எழுதுவதாகிறதா?

●●●

அம்பேத்கருக்கு ''பாரத் ரத்னா'' விருது வழங்கியது மற்றும் நூற்றாண்டு விழா பற்றிய ஒரு செய்திக் கட்டுரை பு.ஜ.வில் எழுதியிருக்கிறோம். அதைத் தனியே அப்படியே இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம். அதில் அம்பேத்கர் பற்றிய நமது மதிப்பீட்டைத் தான் எழுதியிருக்கிறோம். ஆனால், தொல். திருமா கூறுவதைப் போல அந்த விருது வழங்கப்படுவதற்கு அம்பேத்கருக்குத் தகுதியில்லை என்று பொருள் கொள்வதற்கு ஏதாவது இடமிருக்கிறதா? அல்லது அதற்காக இந்திய அரசைத்தான் விமர்சிக்கவில்லையா? ''பாரத ரத்னா'' போன்ற இந்திய அரசின் விருதுகள் எத்தகைய மதிப்புக்குரி



படிப்பகம்

www.padippakam.com

# அம்பேத்கர் நூற்றாண்டு விழா: பெருமை யாருக்கு?

இந்திய அரசியல் சட்டத்தை வடிவமைத்தவரும், 'தாழ்த் தப்பட்ட' மக்களின் தலைவருமான டாக்டர் அம்பேத்கரின் நூறாவது பிறந்தநாள் விழா ஏப்ரல் 14 அன்று நடைபெற உள்ளது. 'சூத்திரர்'களின் அரசான தேசிய முன்னணி அரசு, அம்பேத்கரின் நூறாவது பிறந்தநாளை ஒட்டி ஏப்ரல் 14 அன்று அரசு விடுமுறையாக அறிவித்திருப்பதோடு, நாட்டின் மிக உயர்ந்த ''பாரத ரத்னா'' விருதையளித்து அவருக்கு புகழஞ்சலி செலுத்தி கௌரவித்துள்ளது. ஏப்ரல் 14 முதல் ஓராண்டு காலத்துக்கு நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை அரசு சார்பில் நடத்தவும் ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

தாழ்த்தப்பட்ட மக்களை இரட்சிக்க வந்த புத்தராக சித்த ரிக்கப்படும் அம்பேத்கர், அரசு சலுகைகள் - சன்மானங்கள், இட ஒதுக்கீடுகளைப் பெறுவதன் மூலம் சாதியக் கொடுமையை ஒழிக்க முடியும் என்று கனவு கண்டார். இதற்காக பிரிட்டிஷ் காலனியவாதிகளுடனும், 1947 அதிகார மாற்றத் துக்குப் பின்னர் தரகு முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ ஆட்சியாளர்களுடனும் சமரசமாகவும் அனுசரணையாகவும் நடந்து கொண்டார். உயர்கல்வி கற்ற போதிலும், அவர் காலத்தில் உலகெங்கும் புரட்சிகர மாற்றத்துக்கான போராட்டங்கள் நடந்தபோதிலும் அவர் தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கவே இல்லை. சாதிக் கொடுமைக்கு எதிராகவும் அதற்கு அடித்தளமாக உள்ள நிலப்பிரபுத்துவ கட்டுமானத்தையும் புரட்சிகரமான முறையில் தூக்கியெறிவதற்குப் பதில் சலுகைகளோடு சமாதானம் அடையும் சீர்திருத்தப் பாதையையே தீர்வாக வைத்தார். முதலாளித்து சித்தாந்தக் கண்ணோட்டமும் தீவிர கம்யூனிச எதிர்ப்பும் கொண்ட அவரது வாழ்வும் நடவடிக்கைகளும் அவர் ஒரு முதலாளித்துவ சீர்திருத்தவாதி என்பதையே தெளிவாகக் காட்டுகின்றன.

அவர் மறைவுக்குப் பின், அவர் நிறுவிய குடியரசுக் கட்சியினர் - சாதிய அமைப்புகளை மேலும் விரிவுபடுத்தி அரசு சலுகைகளுக்கான போட்டியில் - பேரத்தில் தீவிரமாக இறங்கி பிழைப்புவாதிகளாக சீரழிந்தனர். தாழ்த்தப்பட்டோரிலேயே பல்வேறு உட்பிரிவுகளுக்கு இடையிலான வேறுபாடுகளின் காரணமாக அக்கட்சி பல்வேறு குழுக்களாக சிதைந்து கிடக்கிறது. தாழ்த்தப்பட்டோரின் பெயரால் சில தனிநபர்கள் சலுகைகள் - சன்மானங்களைப் பெற்று உயர்பதவிகளை அடைந்து மேட்டுக் குடியினராக மாறியதைத் தவிர வேறொன்றையும் அவர்கள் சாதிக்கவில்லை. சாதிய உணர்வுகளைத் தூண்டி தாழ்த்தப்பட்டோரைத் திரட்டி காங்கிரசிடம் அடகுவைத்து ஆதாயம் பெறுவதா அல்லது ஜனதா தளத்திடம் அடகு வைப்பதா என்பதில் பிளவுபட்டு நிற்கும் பிழைப்புவாதிகளாக அவர்கள் முன்னேறிவிட்டார்கள்.

சாதிய பிழைப்புவாதிகளுக்கு அம்பேத்கர் அவசியமானவராக உள்ளதைப் போலவே, இன்றைய ஆட்சியாளர்களுக்கும் அவர் அவசியமானவராகி விட்டார். அம்பேத்கரின் நூற்றாண்டு விழா அவர்களது ஆதாயத்துக்கான வாய்ப்பாக அமைந்துள்ளது. இங்கே கருணாநிதி கூட ராஜாஜி, காமராஜர், எம்.ஜி.ஆர். ஆகியோருக்கு நினைவாலயம் கட்டி தெய்வமாக்கியதைப் போலத்தான் தேசிய முன்னணி அரசும் அம்பேத்கரை துதி பாடுகிறது. இதன் மூலம் அனைத்து தரப்பு மக்களின் ஆதரவைப் பெற்ற ஆட்சி என்று அவர்கள் காட்டிக் கொள்ள முயல்கின்றனர். ''இந்திய அரசியல் சட்டத்தை வகுத்த அந்த மாமனிதற்கு நாடாளுமன்றத்தில் ஒரு உருவப்படம் கூட இல்லையே'' என்று வேதனையடைந்தாராம் வி.பி.சிங். அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது அளித்திருப்பது மிகப் பொருத்தமான சரியான முடிவு என்று வாழ்த்தி வரவேற்றுள்ளார் குடியரசுத் தலைவர். ஆனால், இதே பார்ப்பன குடியரசுத் தலைவர்தான் தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி இழிவுபடுத்தும் இந்துமதப் பண்டாரங்கள் - சங்கராச்சாரிகளின் காலில் விழுந்து வணங்குகிறார். அம்பேத்கரின் நினைவாக தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்கோ, அவர்கள் மீது ஏவப்படும் சாதிய அடக்குமுறையைத் தடுக்கவோ சாதாரண சீர்திருத்த சட்டத்தைக் கூட இன்று அவர்கள் அறிவிக்கவில்லை. அம்பேத்கர் மட்டுமல்ல; வேறு எந்த தலைவரானாலும், அவரது நோக்கங்களை எதார்த்த வாழ்வில் கடைபிடிக்காமல் இருந்துவிட்டு, இறந்தபிறகு அவர்களைப் பூஜை அறைப் படமாக்கி ஓட்டுப் பொறுக்குவதுதான் இப்பிழைப்புவாதிகளின் நோக்கமாக உள்ளது.

இன்றைய ஆட்சியாளர்கள் அம்பேத்கர் நூற்றாண்டு விழா நடத்தி கௌரவிப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவதாக, காந்தி - நேருவின் வாரிசுகள் என்று காட்டிக் கொள்ள முடியாத அளவுக்கு காந்தியிசம் தோற்றுப் போய்விட்டது. எனவே காந்தியத்தை எதிர்த்த நேதாஜி, பகத் சிங் போன்றோருக்கு ராஜீவ் கும்பல்கூட முக்கியத்துவம் அளித்து கௌரவித்தது. அதே உத்தியோடுதான் ஜனதா தள கும்பலும் கிளம்பியிருக்கிறது. ஆனால், நேரு - இந்திரா பரம்பரைக்கு மாற்றான தலைவர்களை அது முன்னிறுத்துகிறது. பீகாரின் புதிய கிரிமினல் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ், ஜெயப் பிரகாசர் உருவச்சிலை முன் நின்று உறுதிமொழியேற்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார். ஆச்சார்ய நரேந்திர தேவ் சிங்கின் நூற்றாண்டு விழாவை சந்திரசேகர் முன்னிருந்து நடத்துகிறார். லோகியாவை போலி சோசலிஸ்டுகள் தூக்கிப் பிடிக்கின்றனர். அதேபாணியில்தான் இப்போது வி.பி.சிங் அரசும் அம்பேத்கரை கௌரவிக்கிறது.

இரண்டாவதாக, ஆளும் வர்க்க நலன்களைக் காத்து மக்களை அடக்கி ஒடுக்குவதற்கான அரசியல் சட்டத்தை இயற்றித் தந்தார் என்பதால் அம்பேத்கருக்கு செலுத்தும் நன்றிக் கடனாக நூற்றாண்டு விழா நடத்தி கௌரவிக்கிறார்கள். சாதிய பிழைப்புவாதிகளும் சட்டம் வகுத்த சிற்பி என்று புகழ்பாடுகின்றனர்.

தனது சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் இந்திய சட்டத்தை இயற்றியுள்ளார் என்பதற்காக தாழ்த்தப்பட்ட மக்கள் பெருமை கொள்ள முடியாது. தாழ்த்தப்பட்டோரை மட்டுமின்றி இதர பிரிவு உழைக்கும் மக்களையும் ஒடுக்குவதற்கான சட்டத்தைத்தான் அவர் வகுத்தளித்தார். தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களின் ஆதிக்கச் சுரண்டலுக்கு ஏற்ற வகையில் தனியுடைமையைக் காக்கும் சட்டத்தைத்தான் அவர் இயற்றினார். அம்பேத்கர் எழுதிய சட்டங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு மண்ணும் செய்யவில்லை என்பதையே 40 ஆண்டுகால அனுபவம் நிரூபிக்கிறது. அவரது சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு புதிதாக வந்த சீர்திருத்தச் சட்டங்கள் கூட தாழ்த்தப்பட்ட மக்களை சாதியக் கொடுமையிலிருந்து காப்பாற்றவில்லை. தனது சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தம்மையே ஒடுக்குவதற்கான சட்டம் இயற்றியதற்காக பெருமை கொள்ள முடியுமா? தனது கையைக் கொண்டே தனது கண்ணைக் குத்திக் கொள்வதில் ஒருவர் மகிழ்ச்சி அடையத்தான் முடியுமா? முடியாது! தனது சமூகத்தைச் சேர்ந்தவர் அடக்குமுறைச் சட்டம் இயற்றியமைக்காக ஆத்திரப்படத்தான் முடியும். அதேசமயம் ஆட்சியாளர்கள் - சாதியப் பிழைப்புவாதிகளின் ஆதாய நோக்கங்களை அம்பலப்படுத்தி, சாதிய விலங்கொடிக்க தாழ்த்தப்பட்ட மக்கள் புரட்சிப் பாதையில் அணிதிரள வேண்டும்.

*(புதிய ஜனநாயகம், 16 ஏப் - 15 மே, '90)*


படிப்பகம்

www.padippakam.com

யவை என்பது பற்றி மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்களின் கண்ணோட்டத்தை சாதாரண புதிய ஜனநாயகம் வாசகர்களே அறிவர். இப்படிப்பட்ட விருதுகளைத் தூக்கியெறிந்தவர்களைப் பாராட்டித்தான் பு.ஜ. எழுதியிருக்கிறது. அப்படி இருக்கும்போது, தானே மதிக்காத ஒரு விருதைப் பெறுவதற்கு அம்பேத்கருக்கு தகுதியில்லை என்று எழுதுவோமா? சட்டம் படித்துள்ள தொல். திருமா தர்க்கத்தைவிட குதர்க்கம் பேசுவதிலும் அதற்காக பொய் பேசுவதிலும் வல்லவராக இருக்கிறார்போலும்!

இந்தக் கட்டுரை வெளியிடுவதற்கு முன்பும் பின்பும் அம்பேத்கரிடம் நாம் காணும் ஏற்கத்தக்க சரியான அம்சங்களுக்காக, அவரைப் பலமுறை உயர்த்திப் பிடித்து எழுதியிருக்கிறோம். திருவரங்கம் கருவறைக்குள் அம்பேத்கர் படத்தை எடுத்துச் சென்று, தமிழகம் முழுவதும் அதைப் பெரிய சுவரொட்டியாகப் போட்டதை விமர்சித்தவர்களுக்கு எழுதிய பதில்களில் இதுபற்றிய விவரங்கள், விளக்கங்கள் தந்திருக்கிறோம்.

1978-லேயே மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரிடத் தீர்மானிக்கப்பட்டது. அதை எதிர்த்து பல தாழ்த்தப்பட்ட மக்களைக் கொன்றும், ஊரைவிட்டு விரட்டியும் பார்ப்பன, மராத்தா ஆதிக்க சாதியினர் கொலைவெறியாட்டம் போட்டனர். 1994-இல் அம்பேத்கர் நூற்றாண்டு விழாவையொட்டி அப்பல்கலைக்கழகத்துக்கு அம்பேத்கர் பெயரிட முயன்றபோது சிவசேனா சாதிவெறியர்கள் மீண்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகக் கொலைவெறியாட்டத்தைத் தொடங்கினர். **சூரியனைப் பார்த்துக் குரைக்கும் நாய்** என்று அட்டைப்படம் போட்டு ''தலித் மக்கள் மீது பாயும் சிவசேனை வெறிநாய்'' என்ற தலையங்கமும் எழுதினோம். ''நாராயண குரு, பெரியார், பூலே, அம்பேத்கர் ஆகியோரின் சாதி ஒழிப்பு, சமூக சீர்திருத்தங்களை நாம் மதிப்போம். ஆனால் அவர்களது சமாதான, சீர்திருத்தங்கள் இந்திய சாதிய ஆதிக்கத்தின் முன் தோற்றுப் போய்விட்டன'' என்றும் எழுதினோம். (1994 மார்ச் 1 இதழ்).

இதே பிரச்சினையில் - மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயரிடுவதை எதிர்த்து சிவசேனா நடத்திய சாதி வெறியாட்டத்தைக் கண்டித்து மதுரையில் பேரணி - மறியல் செய்த




**மகாராஷ்டிராவில் தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல் நடத்திய சிவசேனாவை வெறி நாயாகவும்; அம்பேத்கரை கதிரவனுக்கு இணையாகவும் சித்தரித்து வெளிவந்த புதிய ஜனநாயகம் 15 பிப்ரவரி 1994 இதழின் அட்டைப்படம்.**

தலித் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் மீது போலீசு காட்டமிராண்டித்தனமான தடியடி - கைது ஆகிய ஒடுக்குமுறைகளை நடத்தியது. இதைக் கண்டித்து பு.ஜ. எழுதியது. (1994 மார்ச் 15 பு.ஜ. இதழ் பக்: 2)

இவற்றிலிருந்து அறிவது என்ன? தொல். திருமாவளவன் புதிய ஜனநாயகம் அமைப்புகளைப் பற்றி, ''வெறுப்புணர்ச்சி, காழ்ப்புணர்ச்சி, எதிர்மறை சிந்தனையுடையவர்களாகவே உள்ளனர். எதையும் யாரையும் இவர்கள் நேர்மையாக எழுதிப் பாராட்ட அல்லது ஊக்கப்படுத்தி ஒரு வரிகூட ஒரு வார்த்தைக் கூட எழுதியது கிடையாது. சான்றுகளும் கிடையாது. சி.பி.எம்., சி.பி.ஐ., தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரசு, ம.தி.மு.க., கம்யூனிஸ்டு, பொது மக்கள், பாட்டாளிகள் என்று அனைத்துத் தரப்பினரையும் எதிர்மறையாக விமர்சித்துத் தாக்குவதே இவர்களின் யுக்தியாக இருக்கிறது. இது அவர்களின் வக்கிர உணர்வுகளை அம்பலப்படுத்துகின்ற சான்றுகளாகத்தான் உணர்த்துகின்றன. அவர்கள் மீதிருந்த மதிப்பு பாழாகிவிட்டது'' என்று அவதூறு செய்கிறார்.

இங்கே நாம் கொடுத்துள்ள விவரங்களில் இருந்து, ''வெறுப்புணர்ச்சி, காழ்ப்புணர்ச்சி, எதிர்மறையான சிந்தனையுடையவர்கள், வக்கிர உணர்வுகளைக் கொண்டவர்கள்'' திருமாக்கள்தாம் என்பது விளங்கும்.

இன்னொரு கோணத்தில் இருந்து திருமாவளவனின் உண்மை முகத்தைப் புரிந்து கொள்வோம்.

திட்டக்குடி சம்பவம் குறித்து பு.ஜ. எழுதியது 1995 மார்ச் மாதம். அம்பேத்கருக்கு ''பாரத் ரத்னா'' வழங்கப்பட்டது பற்றி பு.ஜ. எழுதியது 1990-ஆம் ஆண்டு மே மாதம்.

அம்பேத்கருக்கு பாரத் ரத்னா விருது வழங்கியது குறித்த பு.ஜ. கட்டுரை வெளியானபிறகு, புதிய ஜனநாயகம் அமைப்பினரை, அவரது கூற்றுப்படி, ஜனநாயக சக்திகள் என்று கருதி உறவு வைத்துக் கொள்ள விழைந்தார். அதன்பிறகு பு.ஜ. நிலையில் மாற்றம் ஏதும் நடக்கவில்லை. திருமா தான் தலித் மக்களுக்குத் துரோகமிழைத்து அரசியல் சீரழிவு மற்றும் சந்தர்ப்பவாத சகதிக்குள் விழுந்து விட்டார். ஆனால், இப்போது அதற்கு முன்னும் பின்னும் நிகழ்ந்த இரு சம்பவங்களைக் காரணங்களாகச் சேர்த்து ''புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் இவர்களை சனநாயக சக்திகள் என்று வைத்திருந்த நம்பிக்கையும் மதிப்பும் பாழாகிவிட்டது'' என்கிறார், திருமாவளவன். ஆனால், மற்றபிற பிழைப்புவாதத் ''தலித்'' அமைப்புகளில் இருந்து மாறுபட்டதாக விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பு இருக்குமென்று அவர்கள் மீது பு.ஜ. வைத்திருந்த நம்பிக்கை, மதிப்பு - அவர்களது சந்தர்ப்பவாத சீரழிவுகள் காரணமாக பாழாகிப் போனது என்பதுதான் உண்மை.

அவர்கள், கம்யூனிச விரோத, பின் நவீனத்துவ, கழிசடைக் கலாச்சாரவாதிகளோடு சேர்ந்து கொண்டு தலித்திய சித்தாந்தத்தை உருவாக்க எத்தணித்தனர். ஏகாதிபத்தியத் தன்னார்வக் குழுக்களிடம் இருந்து நிதிபெற்று தனது அமைப்பைக் கட்டி வளர்ப்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டனர். இறுதியாக, மூப்பனார், கருணாநிதி, ஜெயலலிதா போன்றவர்களைத் துதிபாடி ஒரு சில சீட்டுக்களைப் பெறும் ஓட்டுக்கட்சி சந்தர்ப்பவாத அரசியலில் குதித்தனர். இதையெல்லாம் தொடர்ந்து எதிர்த்து அம்பலப்படுத்தியதன் விளைவாகத் தான் விடுதலைச் சிறுத்தை தொல். திருமா புதிய ஜனநாயகத்திற்கு எதிராகச் சிலிர்த்துக் கொள்கிறார், சீறுகிறார்.

**(தொடரும்)**

www.padippakam.com

# பட்டினியால் சாகும் பழங்குடி இனக் குழந்தைகள்:

# அரசே நடத்தும் படுகொலைகள்

இந்தியா முழுக்க நிகழும் பழங்குடி குழந்தைகளின் கோர மரணம் கேட்பவரின் நெஞ்சைப் பிளக்கிறது! வனங்களை - விலங்குகளைப் பாதுகாப்பது என்ற பெயரில் பழங்குடிகள், மந்தைகள் போல் காடுகளிலிருந்து விரட்டப்படுகிறார்கள். ஆதிக்க சக்திகள் மற்றும் அதிகார வர்க்கத்தால், காடுகளிலிருக்கும் களைகளாக பிடுங்கி வீசப்படும் பழங்குடிகள், கழிவுகளாக ஒதுங்கிச் சிறுகச் சிறுகச் சாகிறார்கள். பழங்குடிகளின் பட்டினிக் கொடுமைகளுக்குப் பச்சிளங் குழந்தைகள் முதல் பலி ஆகின்றனர்.


பழங்குடி கர்ப்பிணி பெண்கள் ஒருவேளை உணவுக்கும் வழியில்லாமல் மாங்கொட்டைகளையும், கிழங்குகளையும் தின்று, சத்து இல்லாத வெறும் சக்கைகளாகப் பிள்ளைகளைப் பெறுகின்றனர். பிறந்த சிசுக்களோ தாய்ப்பாலும் இல்லாமல், வயிறு வீங்கி, உதடு வெந்து, உடல் முழுக்கக் கொப்புளங்கள் வந்து, இறந்து போகின்றன.

ஆரம்ப சுகாதார அறிக்கைப்படி பிறந்த குழந்தை, குறைந்தது 3 கிலோ எடை இருக்க வேண்டும். ஆனால், பழங்குடி குழந்தைகள் 2 கிலோ எடைக்கும் குறைவாகத்தான் பிறக்கின்றன.

பிறந்த சிசுக்களும் குறைந்தபட்ச மருத்துவக் கவனிப்புக் கூட இல்லாமல் மரணப் பட்டியலில் சேரும் நாட்களை எண்ணி உயிர் வாழ்கின்றன.

குடும்ப நலத்துறை அறிக்கையின்படி, மகாராஷ்டிரா மாநிலத்தில் தானே, நாசிக், அமராவதி உள்பட 5 மாவட்டங்களில் 1020 பழங்குடி குழந்தைகள் கடந்த ஏப்ரல் - மே மாதங்களில் இறந்துள்ளன. 2003-2004 ஓராண்டில் மட்டும் 9,000 பழங்குடி குழந்தைகள் இம்மாவட்டங்களில் இறந்துள்ளன. அரசோ, நிவாரணத் திட்டங்களை முடுக்கி விடுவது என்ற பெயரில் பிணக் குவியல்களை மறைக்கும் முயற்சியில்

**குழந்தைகளின் உடல் நலத்திற்காகவே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதாக அரசு கூறுகிறது. ஆனால், போதிய உணவின்மையால் எலும்பும் தோலுமாக வாடி வதங்கிக் கிடக்கும் ஷிரவன் என்ற இந்தக் குழந்தையைப் பார்த்தால், அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம், அதிகார வர்க்கப் பெருச்சாளிகளின் வயிற்றுக்குள் கரைந்துவிட்டது என்று சொல்லாமலேயே விளங்கும். மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள நந்தர்பார் மாவட்டத்தில் மட்டும் கடந்த ஏப்ரல் தொடங்கி ஜூன் மாதத்திற்குள், 6 வயதுக்கு உட்பட்ட 434 பழங்குடி குழந்தைகள் இறந்து போய் விட்டன.**




படிப்பகம்

www.padippakam.com



11 மாதங்கள் நிரம்பிய பழங்குடி குழந்தை இது. குறைந்தபட்ச ஆரோக்கியத்திற்கு 11 மாதங்களில் குழந்தை 9 கிலோ எடை இருக்க வேண்டும் என்பது ஆரம்ப சுகாதார விதி. இக்குழந்தையின் எடையோ வெறும் 4 கிலோ! சளி, காய்ச்சல் என்று தொடங்கி நுரையீரல் வீங்கி மூச்சு விடமுடியாமல் மரணத்தோடு போராடும் நிலை. உடல் முழுக்க அணலாக எரியும் கொப்பளங்கள் வேறு. "ஒரு வாரத்திற்கும் மேலாக மூச்சுவிடவும் முடியாமல் சிரமப்படுகிறது குழந்தை" என்கிறார், அக்குழந்தையின் தாய் ஜானு. கூலி வேலைக்கு போனால்தான் பிழைப்பு. எனவே, உடனே மருத்துவமனைக்குப் போவதற்கு வசதியில்லை. ஊரிலேயே கை வைத்தியம் பார்த்தார். குழந்தையின் நிலை மோசமாகவே, அரசு மருத்துவமனையில் சேர்த்தார். மகாராஷ்டிர மாநிலம், அமராவதி மாவட்டம், மல்காட் தாலுக்காவின் சிறு நகரம், தரணி. இங்குள்ள மருத்துவமனையில், மயக்க மருந்து மருத்துவரோ, எக்ஸ்-ரே எடுக்கும் ஊழியரோ, சிறப்பு மருத்துவரோ யாரும் இல்லை. மழைக் காலங்களில் வெள்ளம் பெருகித் தொற்றுநோய் பரவும். பழங்குடி குழந்தைகள் கொத்து கொத்தாகச் சாகும். அப்போது, நகரங்களிலிருந்து டாக்டர்கள் சிலர் வந்து போவார்கள். 10 நாட்களுக்குப் பிறகு திரும்பவும் பழைய நிலை! மருத்துவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அரசுக் கணக்குப்படி ஆண்டுக்கு 500 குழந்தைகள் இங்கு இறக்கின்றனர்.

மும்முரமாக இறங்கியுள்ளது. கடந்த 3 மாதங்களில் பட்டினியில் 200 குழந்தைகள் இறந்துள்ள சிக்காட் வட்டத்தில் வெறும் 86 குழந்தைகள் மட்டும் இறந்துள்ளதாக அரசு சாதிக்கிறது.

பட்டினியில் இறக்கும் பழங்குடி குழந்தைகளையும் மரணத்தோடு போராடும் சிசுக்களையும் தரம் வாரியாகப் பிரிக்கிறது பிணந்தின்னும் அரசு! குறைந்தபட்சம் 2 கிலோ எடைக்கு மேல், ஒவ்வொரு 100 கிராம் எடைக்கும் தர வரிசை கொடுத்து 100 கிராம் எடை அதிகமானால் அக்குழந்தையை ஊட்டச்சத்து சலுகை பெறும் திட்டத்திலிருந்து விலக்கி விடுகிறது அரசு.

இதற்கான நுணுக்கமான புள்ளி விபரங்களை, மகாராஷ்டிர மாநில அமராவதி மாவட்ட ஆட்சியர் ரவீந்திர ஜாதவ் கூறுவதைக் கேளுங்கள்: "கடந்த ஆண்டு 2.98 சதவிகிதக் குழந்தைகள் ஊட்டச் சத்துக் குறைவினால் 3 மற்றும் 4-ஆவது தரவரிசையில் - அபாயக் கட்டத்தில் இருந்தார்கள். அதை இந்த ஆண்டு 2.56 சதவிகிதமாகக் குறைத்துவிட்டோம். சிசு மரணங்கள் இப்போது கவலை அளிக்கும்படி எதுவும் உயரவில்லை. 97-98-ஆம் ஆண்டுகளைவிட இப்போது 29.89 சதவிகிதம் குறைந்து இருக்கிறது" என்று வெறும் கையில் லிங்கத்தை வரவழைக்கும் சாயிபாபா போல, புள்ளி விபரங்களை வரவழைத்து காட்டுகிறது, அதிகார வர்க்கம்.

மறுபுறம், பழங்குடிகளின் வாழ்க்கையோ, மீளாத் துயரங்களோடு மரணக் குழியில் கழிகிறது. குழந்தை பருவத்தைக் கடக்காமலேயே இறக்கும் சிசுக்கள், மழலைப் பருவத்தை மரண நோய்களோடு கழிக்கும் சிறுவர்கள், கல்வி இல்லாமல் கூலிகளாகத் திரியும் இளைஞர்கள், மாற்று சேலை கூட இல்லாமல் கிழிந்த சேலையோடு குடும்பத்தைச் சுமக்கும் பெண்கள், காட்டைத்தவிர வேறு எதையுமே தெரிந்து கொள்ள வாய்ப் பில்லாத குடும்பத் தலைவர்கள் - இப்படி மண்ணுக்குள் வாழ்ந்து மண்ணுக்குள்ளே மடியும் மண் புழுக்கள் போல, காட்டுக்குள்ளேயே வாழ்ந்து மடிந்த பழங்குடிகளைக் கை தூக்கிவிடாத அரசு, அவர்களைக் காடுகளிலிருந்தும் விரட்டியடிக்கிறது.


'புலிகளோடு சேர்ந்து கொண்டு அரசு எங்களைக் காடுகளிலிருந்து விரட்டுகிறது' என்கிறார், கனுபடேகர் என்ற பழங்குடி முதியவர். மகாராஷ்டிர மாநிலத்தில் மல்காட் பகுதியில் உள்ள காடுகள் புலிகள் சரணாலயத்திற்கு என்று வளைக்கப்பட்டதால், அங்கு வாழ்ந்த பழங்குடிகள் இப்போது வேலையின்றி விலங்குகள் போல் அலைந்து திரிகிறார்கள். மக்களை வேட்டையாடி விலங்குகளுக்குச் சரணாலயம் அமைக்கிறது, அரசு!

புலி வேட்டைக்கு அஞ்சாத பழங்குடிகள், அதிகார வர்க்கத்தின் சட்டப்பூர்வ வேட்டைக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒதுங்கி-பதுங்கி விலங்குகள்போல் வாழ்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இந்த பழங்குடி சிறுவன் தட்டில் உள்ள உணவின் பெயர் 'புரோட்டோவிட்டா' அதாவது, புரோட்டீன் மிகுந்த உணவு. அதிகார வர்க்கம் இந்த உணவுக்கு அப்படித்தான் பெயர் வைத்துள்ளது. உண்மையில் இது 'கூட்டாஞ் சோறு'! மல்காட் வட்டம், சுங்குடி வனப்பகுதி கிராமத்தில் புலிகளைப் பாதுகாப்பதற்காக, இங்குள்ள பழங்குடிகளை விரட்டுகிறது, வனத்துறை கும்பல். 100 குழந்தைகளில் 67 குழந்தைகள் இங்கு எடை குறைவாக பல்வேறு நோய்களுடன் உயிர் வாழ்கின்றன. இங்குள்ள 70,000 'குர்க்' பழங்குடிகளில் 8,000 பேருக்கு மாதத்திற்கு 6 நாள் மட்டும் வேலை கிடைப்பதாக புள்ளி விபரங்கள் சொல்கின்றன. ஆனால், 43,000 பேருக்கு வேலை கொடுப்பதாக அரசு கணக்கு காட்டுகிறது. இப்பகுதிகளில் மீன்பிடிப்பது கூடத் தண்டனைக்குரிய குற்றம் என்று அறிவித்துள்ளது, வனத்துறை.

காடுகளிலிருந்து விரட்டப்பட்ட சூழலில், அலைந்து திரியும் புதிய வாழ்க்கை முறையே சுமையாகிச் சோர்ந்து போகிறார்கள். திடீரென இருப்பிடங்களை மாற்றுவதால் வேலையில்லாமல், உணவு இல்லாமல் உயிர்க்கொல்லி நோய்களுக்கு ஆளாகிறார்கள். குறிப்பாக, பெண்கள், குழந்தைகள் படும் துன்பத்தைத் தாங்க முடியாமல் நொறுங்கிப் போகிறார்கள். தங்கள் அன்பு செல்வங்களை - குழந்தைகளை - பட்டினியின் கோரப் பிடியிலிருந்து மீட்க முடியாமல் கண்ணெதிரில் இழந்து நிற்கிறார்கள்.

என்ன கொடுமை! இந்த மண்ணின் மைந்தர்கள் அவர்கள்!

இந்த தேசம், அவர்கள் படைத்தது! இந்த மண், அவர்கள் உருவாக்கியது! காடு, மலை, ஆறுகள் அனைத்தும் அவர்கள் சொத்து! இந்தியப் பூர்வகுடிகள் அவர்கள்!

ஆனால், அவர்களின் வாழ்விடங்களை மட்டுமல்ல; அவர்களின் வாழ்வையும் பறிக்கிறது வந்தேறிகளின் கொலைகார படை! மறுபுறம் அந்த காலத்து நேரு மாமா முதல் இந்த காலத்து அறிவாளி அப்துல் கலாம் வரை குழந்தைகள் என்றால் உருகிப் போகிறார்கள். உடனே வாரி அணைத்துக் கொள்கிறார்கள்! ரோஜா போன்ற அதன் பிஞ்சு முகத்தை மண்டியிட்டுக் கொஞ்சுகிறார்கள்! அவைகள் எல்லாம் புண்ணியம் செய்த குழந்தைகள். அவர்களுடைய அப்பாக்கள் 'கான்வென்ட்' கலாச்சாரத்தில் வந்தவர்கள்.

ஆனால், பழங்குடி குழந்தைகள், குழந்தைகள் என்ற சொல்லுக்கே தகுதியில்லாதவர்கள்! பார்க்கவே சகிக்காதவர்கள்! அவர்கள், அறிவாளிகளுக்கு சம்பந்தமில்லாத வேற்று கிரகவாசிகள்! அவர்கள் இருந்தால் என்ன? போனால் என்ன? - இப்படித்தான், அரசு பழங்குடிகளை அணுகுகிறது! அது மட்டுமல்ல, புதிய பொருளாதாரக் கொள்கை என்பதும் இதுதான். 'லாபம் இல்லாதது தேவையில்லை!' காலனியப் பிரதேசங்களையும் அங்குள்ள மக்களையும் ஏகாதிபத்தியங்கள் இப்படித்தான் தரம் பிரிக்கின்றன. வெண்ணெயைத் திரட்டியவுடன் தாழியை உடைத்து விடுகின்றன. இப்படித்தான், இயற்கை வளங்களைச் சூறையாடிய பிறகு ஆப்பிரிக்க கண்டத்தையே கை கழுவி விட்டன ஏகாதிபத்தியங்கள்.

இப்போது, இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளிலும் இதே வழியைப் பின்பற்றுகின்றன. மூல வளங்கள் தீர்ந்துபோன கிராமப்புறங்களையும் வனப்பகுதிகளையும் வெறும் கழிவு குட்டைகளாக நிர்வகிக்கின்றன. மறுபுறம், தேர்ந்தெடுத்த நகரங்களுக்கு மட்டும் தங்க நாற்கரச் சாலைகள், சர்வதேச தரத்தில் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், கேளிக்கை விடுதிகள் என்று தங்களைச் சுற்றி உல்லாசபுரியை உருவாக்கிக் கொண்டு வாழ்கிறது ஏகாதிபத்தியங்களின் கூலிப்படையான, இந்திய ஆளும் கும்பல். இந்த நரவேட்டைக் கூட்டம் நாடு முழுக்க இரத்தத் தடங்களை பதித்து விட்டது! இனி மேலும் நாம் எதிர்க்கவில்லையென்றால், நாளை, நம் குரல்வளையும் இருக்காது!

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## பூனை வெளியே வந்துவிட்டது

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த கோவை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் கே. சுப்பராயன், காளப் பட்டியில் தாழ்த்தப்பட்டோர் மீது வன்கொடுமைத் தாக்குதல் நடத்திய கவுண்டர் சாதியைச் சேர்ந்த குற்றவாளிகளை, 29.5.04 அன்று சிறைச்சாலையில் சந்தித்து ஆறுதல் கூறியி ருக்கிறார். இந்தச் சந்திப்பு பத்திரிகைகள் மூலம் அம்பலமான வுடன், "நான் குற்றவாளிகளைச் சந்திக்கச் செல்லவில்லை. சிறைச்சாலையில் நிழற்குடை அமைப்பது தொடர்பாகப் போயிருந்த பொழுது, கவுண்டர் தரப்பின் வற்புறுத்தலின் பேரில் சந்திக்க வேண்டியதாகி விட்டது" எனத் தன்னிலை விளக்கம் அளித்து மழுப்பினார், சுப்பராயன். ஆனால், அவ ருடன் சென்ற சட்டமன்ற உறுப்பினர் கே.சி. கருணாகரன் இந் தச் சந்திப்பை உறுதிப்படுத்தியதோடு, "அவர்கள் குற்றம் சாட் டப்பட்டவர்களே தவிர, குற்றவாளிகள் அல்ல" எனக் கூறி, சி.பி.ஐ. கோவை மாவட்டக் கிளையின் கவுண்டர் சாதி பாசத் தைப் போட்டு உடைத்துவிட்டார்.

## பகற்கொள்ளையும், பலே உதவியும்

பல்வேறு ஏழை நாடுகள் 2003-ஆம் ஆண்டில் மட்டும் ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து பெற்ற உதவித் தொகை 2,70,000 கோடி ரூபாய். அதே சமயம், அதே 2003-ஆம் ஆண்டில் ஏழை நாடுகள், ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து பெற்ற பல்வேறு விதமான கடன்களுக்காக அசலும், வட்டியு மாகத் திருப்பிக் கொடுத்த தொகை 21,80,000 கோடி ரூபாய். அதாவது, ஏகாதிபத்திய நாடுகள், ஏழை நாடுகளுக்குச் செய்த உதவியைவிட, ஏழை நாடுகளில் இருந்து பிடுங்கிக் கொண் டது 8 மடங்கு அதிகம். அடித்த கொள்ளையில் ஒரு பகுதி யைத் திருப்பிக் கொடுப்பதற்குப் பெயர் உதவியா?

## இந்து ஒற்றுமையின் இலட்சணம்!

மத்தியப் பிரதேசத்திலுள்ள கன்ஹிவாடா கிராமத்தில், யாதவ் கோலி சாதியைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணும், தாழ்த்தப்பட்ட மகர் சாதியைச் சேர்ந்த கோவர்தன் என்ற இளைஞனும் சாதிக் கட்டுப்பாடுகளை மீறி, வீட்டை விட்டு வெளியேறி காதல் திருமணம் செய்து கொண்டனர். இதன் பின், மேல்சாதிவெறியோடு கூடிய யாதவ் சாதி பஞ்சா யத்து சபை, பெண்ணை உடனே ஒப்படைக்கும்படி கோவர்தனின் தந்தையைக் கூப்பிட்டு மிரட்டியது. அவர்கள் இருக்கும் இடம் தனக்குத் தெரியாது என அவர் கூறியிருக்கிறார். இதனை நம்ப மறுத்துவிட்ட மேல்சாதிக் கும்பல், கோவர்தனின் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்களை இரவோடு இரவாகக் கடத் திக் கொண்டு போய், கும்பலாகப் பாலியல் பலாத்கா ரப்படுத்தி, சாதிக் கட்டுப்பாட்டை மீறியதற்காகத் தண் டித்து விட்டது.

## அண்டப் புளுகன் பிளேர்

"ஈராக்கிடம் இருக்கும் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைக் கொண்டு, சதாம் ஹுசேன் பிரிட் டனைத் தாக்குவதற்கு 45 நிமிடங்களே போதும்" - என்ற உளவுத் துறையின் கண்டுபிடிப்பைக் காட்டி தான் பிரிட்டன் பிரதமர் பிளேர், ஈராக் மீதான ஆக்கிர மிப்பு போரை நியாயப்படுத்தி வந்தார். இந்த உளவுத்துறை அறிக்கையை ஆராய நியமிக்கப்பட்ட பட்லர் கமிட்டி, "இந் தக் கண்டுபிடிப்பு வெறும் உளறல்; ஈராக் மீது போர் தொடுப்ப தற்காகவே பிளேர் இந்தக் கண்டுபிடிப்பை ஊதிப் பெருக்கி னார்" என அறிவித்துவிட்டது. இதையடுத்து பிரிட்டனில், "ஈ ராக் மீது போர் தொடுத்ததற்காக பிளேர் பகிரங்கமாக மன் னிப்பு கேட்க வேண்டும்" எனக் கோரி ஆர்ப்பாட்டங்கள் நடக்கத் தொடங்கிவிட்டன.

## கல்விக் கட்டணமா? வழிப்பறிக் கொள்ளையா?

சென்னை பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் தமிழ், வரலாறு பாடப்பிரிவுகளுக்கு சென்ற ஆண்டு வசூலிக்கப் பட்ட கல்விக் கட்டணம் ரூ. 1,300/- அது, இந்த ஆண்டு ரூ. 4,190/- ஆக உயர்ந்து விட்டது. ஆராய்ச்சி பாடப் பிரிவுக ளுக்கான கட்டணம் ரூ. 1,350/-லிருந்து ரூ. 6,120/- ஆக வானத்துக்குத் தாவிவிட்டது. இது ஒருபுறமிருக்க, கணினிக் கட்டணம், இணையதளக் கட்டணம் எனப் பல பெயர்களில், கல்விக் கட்டணம் போகக் கூடுதலாக 3,000 ரூபாயைப் பிடுங்கவும் பல்கலைக்கழகம் தயாராகி விட்டது. அரசு நடத் தும் பல்கலைக்கழகத்தில் தனியாரைப் போல ஏன் கொள்ளை யடிக்கிறீர்கள் எனக் கேட்டால், சென்னை பல்கலைக்கழகத்தை உலகத் தரத்துக்கு உயர்த்தப் போவதாகப் பதில் வருகிறது.

## எங்கே சமூக நீதி?

அரசாங்கப் புள்ளி விவரப்படி, 1998-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்டோர் மீது நடந்த வன்கொடுமைத் தாக்குதல்க ளின் எண்ணிக்கை 7,445. இது, 2002-ஆம் ஆண்டில் 33,507 ஆக அதிகரித்துவிட்டது. இதே கால கட்டத்தில் பழங் குடியின மக்களின் மீது நடந்த தாக்குதல் 725 லிருந்து 6,774 ஆக அதிகரித்துள்ளது. இந்து மதவெறியர்களோடு கைகோர்த்துக் கொண்டு "தலித் சகோதரி" மாயாவதி ஆட்சி நடத்திய உ.பி.யில், 2002-ஆம் ஆண்டில் மட்டும் 7,927 தாக்குதல்கள் நடந்துள்ளன. "சமூக நீதி" கட்சிகள் நிறைந் துள்ள தமிழ்நாட்டில் 2002-இல் நடந்த தாக்குதல்களின் எண்ணிக்கை 2,097.

பட்லர் அறிக்கை வெளியான பிறகு, ஈராக் ஆக்கிரமிப்புப் போரை உடனே நிறுத்தக் கோரி இலண்டனில் நடந்த ஆர்ப்பாட்டம்.




Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்




# இதுதான் இன்றைய இந்தியா



"என்ன, நீங்க இன்னும் ஷாப்பிங் போக ரெடியாகலையா?" என்று கேட்பது போல் இருக்கிறது இந்தப் படத்திலுள்ள சிறுமியின் முகபாவனை. ஒரு காலத்தில், கோயில், குளம், உபன்யாசம், கச்சேரி என மாலைப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த மேல்சாதி - மேட்டுக்குடி கும்பலின் கலாச்சாரம், இன்று "ஷாப்பிங்", "அவுட்டிங்" என மாறிவிட்டது.

"ஷாப்பிங்" செல்லும் குழந்தைகள், பெற்றோரின் கையைப் பிடித்துக் கொண்டு வேடிக்கை பார்க்கச் செல்வதில்லை. மாறாக, இன்று, தாராளமயத்தின் பின் அவர்கள்தான் வாங்க வேண்டிய பொருளின் "பிராண்டை"த் தீர்மானிக்கிறார்கள். "மார்க்கெட்"டில் புதிதாக என்ன பொருள் வந்திருக்கிறது? அதன் தரம் என்ன? விலை என்ன? என்பதெல்லாம் இந்தக் குழந்தைகளுக்கு அத்துப்படி. இந்தியாவில் மட்டும், இது போன்ற நவீன யுகக் குழந்தைகள் 3.2 கோடி பேர் நகர்ப்புறங்களில் குவிந்து கிடக்கிறார்கள். நுகர்வு கலாச்சார புரட்சி ஏற்படுத்திய மாற்றம் இது என தாராளமயத்தின் ஆதரவாளர்கள் பூரித்துப் போய்ச் சொல்கிறார்கள். ஆனால், இந்தியாவில் வசிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, நகர்ப்புறத்து மேட்டுக்குடி குடும்பங்களோடு முடிந்து விடுவதில்லையே!

பார்ப்பவர்களை மயக்கிவிடும் இந்தச் சிறுமியின் கள்ளங்கபடமற்ற சிரிப்பின் பின்னே ஒரு பரிதாபகரமான வாழ்க்கை இருப்பது உங்களுக்குத் தெரியுமா? கூலித் தொழிலாளியாக இருப்பதைவிடக் கொடூரமானது கொத்தடிமையாக இருப்பது. இந்தச் சிறுமிகளின் தாய்-தந்தை மட்டுமல்ல, இந்தச் சிறுமிகளும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்தான். ஓடியாடி விளையாட வேண்டிய இச்சிறுமிகளது குழந்தைப் பருவம், செங்கற் சூளையில் தினம் தினம் வெந்து போகிறது.

இந்தியாவில் பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், கிட்டதட்ட 6 கோடிக்கும் மேலான சிறுவர்கள், குழந்தை உழைப்பில் கட்டாயமாக ஈடுபடுத்தப்படலாம் என்கிறது ஒரு புள்ளிவிவரம். செங்கல் சூளைகள், தீப்பெட்டி - பட்டாசு தொழிற்சாலைகள், நவரத்தினக் கற்கள் மெருகேற்றுவது, தரைவிரிப்பு நெசவு, வடநாட்டில் மிட்டாய்க் கடைகள், தனியார் விவசாயப் பண்ணைகள், பணக்கார வீடுகளில் வீட்டு வேலை செய்வது - இங்கெல்லாம் குழந்தைகளைக் கொத்தடிமைகளாக வைத்துக் கொண்டு வேலை வாங்குவது பகிரங்கமாகவே நடக்கிறது.

தாராளமயம் விவசாயத்தையும், கிராமப்புறக் கைத்தொழில்களையும் நாசமாக்கியதன் விளைவாகத்தான், குழந்தைகள் கொத்தடிமைகளாக விற்கப்படுவது முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகரித்துக் கொண்டே போகிறது. தாராளமயத் தாக்குதலை ஒவ்வொரு நாளும் தீவிரப்படுத்தி வரும் அரசு, இன்னொருபுறம் குழந்தை தொழிலாளர் ஒழிப்புச் சட்டம், கொத்தடிமைத் தடுப்புச் சட்டம் என காகிதச் சட்டங்களைப் போட்டு ஊரை ஏய்த்தும் வருகிறது.

பல கோடி குழந்தைகளின் வாழ்க்கையை அழித்துவிட்டு, ஒரு சில குழந்தைகள் மினுக்குவதைச் சாதனையாகக் காட்டும் தாராளமயத்தை நாம் இன்னுமா சகித்துக் கொள்ள வேண்டும்? ●